Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 25 செவ்வாய்க்கிழமை (11.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 319



## புலிகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிவு பயணத் தடை அல்ல! அவர்களோடு பேசவும் தடையில்லை!

### உதயனுக்கு அளித்த செவ்வியில் நெதர்லாந்து தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

விடுதலைப் புலிகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கை அவர்களுடன் பேசுவதற்கான தடையல்ல.

இவ்வாறு கருத்து வெளியிட்டார் இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் ஆர்.எஸ். வன் டிக்.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் குடாநாட்டில் 'நிக்கொட்' திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆழிப் பேரலை பாதித்த இடங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிடுவதற்குமென நெதர்லாந்துத் தூதுவர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்.வந்தார்.

யாழ்.செயலகத்தில் வைத்து யாழ்.மாநகரசபைக்கான இரண்டு உழவு இயந்திரங்களை மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானத்திடம் தூதுவர் கையளித்தார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கையளிப்பு நிகழ்வில் 'நிக்கொட்' பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.நவரட்ணராஜா, நெதர்லாந்துத் தூதரகத்தின் சிரேஷ்ட திட்டமிடல் அதிகாரி பந்துல, பிரதேச

(18 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினை, பொருளாதார விடயங்களில்

# மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையை தெளிவுபடுத்தக் கோருகிறார் அனுரா!

## சு.கவின் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கான வேட்பாளர்கள் இடையே முறுகல் உச்சம்

கொழும்பு, ஒக்ரோபர்11

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அக்கட்சியின் அடுத்த பிரதமர் பதவிக்காகப் பிரேரித்திருக்கும் வெளிவிவகார அமைச்சரான அனுரா பண்டாரநாயக்காவுக்கும் இடையிலான கருத்து முரண்பாடு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது.**

**நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிணக்கு மற்றும் பொருளாதார விடயங்களில் குழப்பமான நிலையில் இருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவ்விடயங்களில் தமது கொள்கை நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று அனுரா கோரியிருக்கின்றார்.**

இந்த இருவிடயங்களிலும் ஜே.வி.பியின் கொள்கைகளுக்குள் மஹிந்த மூழ்கிவிட்டாரா அல்லது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில்தான் தொடர்ந்தும் அவர் இருக்கின்றாரா என்பதுதான் அனுரா பண்டாரநாயக்காவின் தற்போதைய கேள்வியின் சாராம்சமாகும்.

தாமும், தமது சகோதரியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வெளிநாட்டில் இருந்தசமயம், தங்களது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கை, கோட்பாடுகளுக்கு முரணான அம்சங்களில் இணக்கம் தெரிவித்து ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் மஹிந்த

(18 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பிரதிநிதி கொழும்பு வந்தார்

கொழும்பு, ஒக்.11

போர்நிறுத்த அமைதி ஒப்பந்தத்தின் செம்மையான அமுலாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர விடயங்கள் என்பன குறித்து அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் பேச்சு நடத்துவதற்காக நோர்வே அரசின் விசேட பிரதிநிதியான இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலை தொடர்பாக பிரபல தமிழ் வர்த்தகர் கைது!

கொழும்பு, ஒக்.11

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் பிரபல கோடிஸ்வர தமிழ் வர்த்தகர் ஒருவர் நேற்று அதிகாலை பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

அரசசார்பற்ற நிறுவனமொன்றில் கடமையாற்றும் ஆஸ்திரேலியத் தம்பதியினரது தெஹிவளை வீட்டில் தங்கியிருந்தபோது சாள்ஸ் ஞானக்கோன் என்ற அந்த வர்த்தகர் அதிகாலை ஒன்றரை மணியளவில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். பின்னர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பெறுபேறு நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.11

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை நாளை புதன்கிழமை காலை தொடக்கம் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பார்வையிடமுடியும். இத்தகவலை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புல

(18 ஆம் பக்கம் பார்க்க)

## மின் விநியோகம் விரைவில் சீராகும்

யாழ்ப்பாணம்,ஒக்.11

குடாநாட்டில் சில நாள்களாக அடிக்கடி ஏற்பட்டுவரும் மின்தடை ஓரிருதினங்களில் சீராகும் என மின்சாரசபை அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள 'கூல் ஏயார்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகளில் ஐந்து பழுதடைந்த காரணத்தினா

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை!

அம்பாறை மாவட்டம் பொத்துவில் நகரில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை மாலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பொத்துவில் பிரதேச அமைப்பாளரான அபூபக்கர் சஹாப்தீன் (வயது 43) என்ற அந்நபர் கடை ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த

(18 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டில் இராணுவ அதிகாரி படுகாயம்!

### திருமலை, உப்புவெளியில் சம்பவம்

கொழும்பு, ஒக்.11

திருகோணமலை, உப்புவெளிப் பிரதேசத்தில் உள்ள அபயபுர இராணுவ முகாமிற்கு அருகில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

மிகுந்துபுர இராணுவமுகாம் அதிகாரியே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவராவார். சிப்பாய் ஒருவரின் சூட்டுக்கு இலக்காகி இவர் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். "இனந்தெரியாத நபரொருவர் தப்பியோடியுள்ளார். அதை அவதானித்த இராணுவத்தினர் அவரை நிற்குமாறு சத்தமிட்டுள்ளனர். அவர் அதனை அசட்டை செய்யவே அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் குறித்த நபர் காயமடைந்தார். - என்றார் இராணுவப் பேச்சாளர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் உணவுத் திட்ட அதிகாரி

கிளிநொச்சி,ஒக்.11

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை உலக உணவுத் திட்டத்தின் ரோம் தலைமையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் போல்ஸ் கைற்றி கிறிஸ் ரோபசன் நேற்று திங்கட்கிழமை சந்தித்துப் பேசினார். கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் பற்றி தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் போல்ஸ்கைற்றி

(18 ஆம் பக்கம் பார்க்க)



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப்டினனட் மாலதியின் 18 ஆவது நினைவு நிகழ்வு கோப்பாய் தரவையில் உள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இதன்போது மாவீரர் மாலதியின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும் நினைவு நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரர் வீரவேங்கை நந்தினியின் தாயார் திருமதி ஆனந்தம் திரவியம் ஏற்றுவதையும் தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் மேஜர் கலைமகளின் தாயார் திருமதி நாகேஸ்வரி தங்கராசா ஏற்றுவதையும் கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோர் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# மாலதி நினைவுதினம் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

முதல்பெண் மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 18ஆவது நினைவு தினமும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் நேற்று தமிழர் தாயகப் பகுதிகளில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

குடாநாட்டில் பிரதான நிகழ்வு மாலதி வீரச்சாவடைந்த இடமான கோப்பாய் கைதடி வீதியில் கோப்பாய் சந்தியை அண்டிய தரவைப் பகுதியில் நடைபெற்றன.

நேற்று முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் சந்தியில் இருந்து மாலதியின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் நிகழ்வு இடத்திற்கு எடுத்துவரப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆசிரியர்கள் ஆகியோர் அணிவகுத்துச் சென்றனர்.

முற்பகல் 10.30 மணிக்கு மாலதியின் நினைவிடத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுடரினை மாவீரரான வீரவேங்கை நந்தினியின் தாயார் திருமதி ஆனந்தம் திரவியமும் தமிழீழத் தேசியக் கொடியினைக் கரும்புலி மேஜர் கலைமகளின் தாயார் திருமதி நாகேஸ்வரி தங்கராசாவும் ஈகச்சுடரினை வீரவேங்கை ராதையின் தாயார் புவனேஸ்வரி கணேசனும் ஏற்றிவைத்தனர்.

மாலதியின் நினைவுக்கல்வெட்டிற்கான மலர்மாலையினைக் கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலனும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.விஜயரூபனும் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

அதன் பின்னர் யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன் மற்றும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பா.கனகலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவனேசன், செ. கஜேந்திரன் ஆகியோரும் கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள், கோப்பாய் பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**வடமராட்சியில்**

முதல்பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் நினைவுதினமும் தமிழீழ மகளிர் தினமும் வடமராட்சியிலும் வெகு எழுச்சியுடன் இடம்பெற்றன.

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் மாவீரர் துயிலும் இல்ல எழுதுவினைஞர் ஆர்.எஸ்.விநாயகமூர்த்தி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் துயிலுமில்லப் புனரமைப்புக் குழுவின் உபதலைவர் சி.மகாலிங்கமும் ஈகச்சுடரினை மாவீரர் மேஜர் றோமின் தந்தை சி.கணபதிப்பிள்ளையும் ஏற்றினர்.

தொடர்ந்து மாலதியின் உருவப்படத்திற்கான மலர்மாலையை மாவீரர் துயிலுமில்லப் புனரமைப்பு நிர்வாக உறுப்பினர் அ. அமிர்தலிங்கம் அணிவித்தார். தொடர்ந்து மலர்வணக்கம், அகவணக்கம் என்பன இடம்பெற்றன.

**பொருண்மிய நடுவப்பணியகத்தில்**

முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 18ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று வட்டக்கச்சியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்திலும் நடைபெற்றன.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு பொருண்மிய நடுவப்பணியக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி க.மதிவதனி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. மாலதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை திட்ட அலுவலர் மு.கந்தசாமி ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார். மாலதியின் திருவுருவப்படத்துக்கு புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் மலர்மாலை அணிவித்தார். அரங்க நிகழ்வுகளில் சி.கரிகாலன், க.வே.பாலகுமாரன் ஆகியோர் உரையாற்றினர்.

(த-3-7-70-86-410-202-352)

# மீசாலை காயத்திரி பீட கட்டடங்கள் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரை!

தென்மராட்சி,ஒக்.11

மீசாலை டச்சு வீதியில் அமைந்துள்ள காயத்திரி காமகோடி பீடத்தின் பீடாதிபதி அலுவலகம் மற்றும் அங்கிருந்த கட்டடங்கள் இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டு பின்னர் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

அடையாளம் தெரியாதவாறு முகத்தை மறைத்துக்கொண்டுவந்த இனந்தெரியாத குழுவினர் நேற்று அதிகாலைவேளை அங்கிருந்த கட்டடங்களை சேதப்படுத்தி தீ வைத்தனர் என்று கூறப்படுகின்றது.

அந்த வளாகத்தில் அமைந்திருந்த ஸ்ரீ காயத்திரி அம்மன் ஆலயமும் தீக்கிரையானது. மிகப்பெரிய சிவலிங்கம் வடிவில் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் அண்மையிலேயே கும்பாபிஷேகம் செய்துவைக்கப்பட்டது.

ஸ்ரீ காயத்திரி பீடத்தின் பீடாதிபதி ராஜ்குமார் சுவாமிகள் கடந்த வியாழனன்று இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கிப் படுகாயப்படுத்தப்பட்டார் என்பது தெரிந்ததே.

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த அவரை இராணுவத்தினரும் ஈ.பி.டி.பி. அமைப்பினரும் அங்கிருந்து பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு கொண்டுசென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் சுவாமிகள் கொழும்பில் பலத்த பாதுகாப்புடன் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருக்கிறார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

ராஜ்குமார் சுவாமிகள் ஸ்ரீ காயத்திரி பீடத்தை நிறுவி அதன் பீடாதிபதியாக இருந்து அதனை நிர்வகித்து வந்தார்.

மீசாலையில் பெருந்தொகை நிதியில் நிர்மாணிக்கப்பட்ட பீடத்தின் கட்டடங்களே தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தீக்கிரையாக்கப்பட்ட காமகோடி பீடத்தின் வளாகத்துக்குப் பலத்த பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. வளாகப் பகுதிக்குள் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. (ஜ-117-31)

# திருமலையில் ஒக். 22இல் எழுச்சி நிகழ்வு

திருகோணமலை,ஒக்.11

வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 22ஆம் திகதி திருகோணமலையில் எழுச்சி நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

திருமலை உள்துறைமுக வீதியில், ஆளுநர் பணிமனைக்கு முன்பாக அமைந்துள்ள மைதானத்திலும் அருகிலுள்ள கலாசார மண்டபத்திலும் இதற்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

திருமலை நகரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலையை அகற்றவேண்டும் என்றும் -

நகரில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும் என்றும் -

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள முடிவை மீளப்பெறவேண்டும் என்றும் - இந்த எழுச்சி நிகழ்வில் வலியுறுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

எழுச்சி நிகழ்வை முன்னெடுக்க பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஓ-3-151)

# பெருமாள் கோவிலில் இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 6.30 மணிக்கு மூலஸ்தானப் பூசையும் 7 மணியளவில் கொடித்தம்பப் பூசையும் 8 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறுகின்றன. முற்பகல் 10 மணியளவில் வரதராஜப் பெருமான் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரராய் தேரில் எழுந்தருளுவார்.

நாளை புதன்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. காலை 7.30 மணியளவில் மூலஸ்தானப் பூசையுடன் ஆரம்பமாகி 9 மணியளவில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

அன்றைய தினம் திருகோண தீபப் பூசையும் இடம்பெறவுள்ளது. (ஒ-13)

# திட்டமிடல் உதவியாளர்களாக ஆயிரத்து 200 பேருக்கு நியமனம்

திருகோணமலை,ஒக்.11

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் திட்டமிடல் உதவியாளர்களாக ஆயிரத்து 200 பேர் நியமனம் பெற உள்ளனர்.

மாகாணக் கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் 2 ஆயிரம் பட்டதாரிகளுக்கு. ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

எஞ்சிய ஆயிரத்து 200 பேருக்கு நியமனம் வழங்க அனுமதி வழங்குமாறு மாகாண கல்வியமைச்சு மத்திய கல்வியமைச்சைக் கோரியிருந்தது. இதற்கான அனுமதியை மத்திய கல்வியமைச்சு நேற்று வழங்கியுள்ளது.

இதன்படி எஞ்சிய ஆயிரத்து 200 பேரும் 07.09.2005 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திட்டமிடல் உதவியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

நியமனம் பெறுபவர்கள் பாடசாலைகளில் திட்டமிடல் உதவியாளர் பதவியுடன் ஆசிரியர் பணியையும் மேற்கொள்ளலாம் என மாகாணசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3-151)

# பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

கொழும்பு, ஒக்.11

பிரபல ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று இந்த வ கு விசாரணை மேல்நீதிமன்ற நீதிபதி ரோகினி பெரேரா முன்னிலையில் நடைபெற்றது. இ ன்போது கொலை தொடர்பில் சந்தேகநபர்களைக் குற்றவாளிகளாகக் காணப்போதியளவு ஆதாரம் இல்லையென்றும், வழக்கில் சுற்றவாளிகளாகக் காணப்படுவதால் இவர்களை விடுதலை செய்கின்றார் எனவும் நீதிபதி அறிவித்தார்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊடகவியலாளர் ரிச்சட் டி சொய்ஸாவைக் கடத்தியமை, கொலை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சா கொட, இன்ஸ்பெக்டர் சி.டபிள்யூ, தேவசுரேந்திர, பொலிஸ் சார்ஜண்ட் சரத்சந்திர ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (க)

# இதய நோயாளருக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.11

ஆஸ்திரேலியாவிலிருந்து தாயகம் வந்துள்ளவரான இதய சத்திர சிகிச்சை நிபு ணர் டாக்டர் நற்குணம் இதய சத்திரசிகிச்சை தொடர்பான இலவச மருத்துவ ஆலோசனைகளை நாளை புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வழங்கவுள்ளார்.

இதய நோய் தொடர்பான ஆலோசனைகளைப் பெறவிரும்புபவர்கள் இந்த மருத்துவ முகாம் மூலம் பயனடையலாம் என்றும் -

இதில் தெரிவுசெய்யப்படும் நோயாளர்களுக்கு பின்னர் சிகிச்சை வழங்கப்படுமென வும் மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.(ஒ-203)

# காணி அதிகாரிகளாக இருவருக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தின் காணி நிர்ணய அதிகாரிகளாக இருவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

துரித காணிச் செயலணி உதவி ஆணையாளராகப் பணியாற்றிய கு.ஞானசேகரமும்-

யாழ்.மாவட்ட காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்ட பதிவாளராகவும் பணியாற்றிய பொ.ஈஸ்வரதாசனும் - புதிய நியமனம் பெற்றவர்களாவர். (3)

*நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபைக்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அவற்றைக் கையளிக்கும்நிகழ்வு நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானத்திடம்இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் உழவு இயந்திரங்களின் சாவியை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கிறார்.* [படம் :பிரபா]



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சர்வதேச கருத்தை நேர்சீர் செய்ய சரியான வழியில் செயற்படுவோம்

விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பில் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு விடயங்களை ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியசபை அடுத்த இரண்டு வாரங்களில் மீண்டும் கூடவிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதேசமயம், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளைப் பார்வையாளராக இங்கு அனுப்புவதன் மூலம் இலங்கை நிலைமை குறித்து சுயாதீன அவதானிப்பு ஒன்றைப் பெறவும் ஐரோப்பிய ஒன்றியம் முஸ்தீபு செய்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இலங்கை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள தமிழர் தாயகப் பிரதேசத்தில் கட்டுமட்டில்லாத அளவில் கொலைகளையும் வன்முறைகளையும் இடம்பெறச் செய்து அந்தக் கொலைகள் மற்றும் வன்முறை சம்பவங்களுக்கான பொறுப்பை புலிகள் மீது சுமத்தும் அரசியல் வஞ்சகத்தனத்துடன் கூடிய கபடச் சதி அரங்கேறுவதாகப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ள சமயத்திலேயே ஐரோப்பிய ஒன்றியம் பற்றிய மேற்படி செய்தியும் வெளியாகியிருக்கின்றது.

ஏற்கனவே, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தமது ஒன்றிய நாடுகளுக்கு வருகைதந்தால் அவர்கள் வரவேற்கப்படமாட்டார்கள் என்ற சாரப்பட ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த அறிக்கை சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக அபாண்டமாகச் சுமத்திய பரப்புரைகளுக்கு எடுபட்டே இப்படி ஒரு பக்கச்சார்பான அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக எழுந்துள்ளது. கிழக்கில் ஆயுதக் குழுக்களைத் தூண்டிவிட்டு இயக்குவதன் மூலம் அமைதி நிலையைக் குழப்புவதற்கு இலங்கை அரசுப் படைகளும், அவற்றின் புலனாய்வுப் பிரிவுமே காரணம் என்பதும் அத்தகைய குழப்பத்துக்கு அடிப்படையான அரசின் சதி நடவடிக்கையே அமைதிக் காலத்தில் இவ்வாறு வன்முறைகளும், கொலைகளும் அதிகரிக்க மூலகாரணம் என்பதும் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டப்பட்டுவருகின்றன. ஆனால், இந்த அடிப்படை உண்மையை - ஆதார அம்சத்தை - மறந்துவிட்டு, இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகக் காட்டமாக ஏதும் கூறாமல், புலிகளுக்கு எதிராக மட்டும் ஓர் அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் விடுத்தமை அதன் பக்கச்சார்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்று தமிழர் தரப்பால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

''நீதி நிலைநாட்டப்படுவதுமன்றி நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்'' (Justice not only be done but also appear to be done) என்பார்கள்.

இலங்கை விடயத்தில் புலிகளுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மட்டுமல்ல, புலிகளுக்கும் இந்த வாய்மொழி பொருந்தும். இதுதான் இப்போதைய நிலையில் பொருத்தமான அணுகுமுறையாகவும் இருக்க முடியும்.

அதையே செய்யத் தயாராகின்றது ஐரோப்பிய ஒன்றியம் என்பது போலப்படுகின்றது.

சர்வதேச பார்வையாளர்களை அனுப்பி, அவர்களின் சுயாதீன அறிக்கையை மேற்கோள்காட்டி அதன்படி செயற்படுவதன் மூலம் தன்னை நேர்மையின்பால் செயற்படுவதாகக் காட்டிக்கொள்ள திட்டமிடுகின்றது ஐரோப்பிய ஒன்றியம்.

இவ்வாறு சர்வதேச ரீதியில் விரிக்கப்பட முயலும் வலைக்குள் சிக்கிக்கொள்ளாமல் தன்னைக் காத்துக் கொள்வதற்குத் தமிழர் தரப்பும் தயாராக வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எனவே, தமிழர் தரப்பும் தான் நீதியாகச் செயற்படுவது மட்டுமல்ல, அதனை வெளியில் காட்டவும் வேண்டும். அதுதான் சர்வதேச வலைவிரிப்புக்கு எதிரான - சரியான - பதில் நடவடிக்கையாக இருக்கும்.

இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று - தமிழர் தரப்பு நேர்மையாக, நீதியாக நடந்துகொண்டு அதை சர்வதேச சமூகத்துக்கு உறைக்கும்படி சொல்வது. மற்றது - தமிழர் விரோத போக்கில் இவ்விவகாரம் தொடர்பாக தென்னிலங்கை மேற்கொள்ளும் பொய்ப்பரப்புரைகளையும், பசப்புரைகளையும் அம்பலப் படுத்துவது.

இந்த இரட்டை இலக்கு நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதாயின் களத்தில் விடயங்களைக் கையாளும் போக்கில் . - அணுகு முறையில் - மாற்றங்கள் அவசியம். புதிய தந்திரோபாயங்கள், யுக்திகள் வகுக்கப்படுவது கட்டாயம். களமுனைச் செயற்பாடுகளுக்கான நடவடிக்கைத் தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுப்பதற்கு முன்னர் அந்தச் செயற்பாடுகளின் பெறுபேறுகள், பயன்கள் என்பவை குறித்தும் அவை சர்வதேச ரீதியில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் மற்றும் விளைவுகள் குறித்தும் ஒப்பீட்டு ரீதியில் தெளிவான கணிப்பீடு இருப்பது அத்தியாவசியம். அதாவது, சாதக பாதகங்களை உய்த்தறிந்து முடிவுகளை எடுப்பது அவசியம்.

அவதானங்களை ஒன்று சேர்த்து அனுமானத்துக்குவரும் சர்வதேச சமூகத்துக்கு வெறுமனே அது தப்பு என்று சுட்டிக்காட்டுவதுடன் நின்றுவிடாமல், அந்த அவதானங்களின் பின்னணிகளை அம்பலப்படுத்துவதன் மூலம் அனுமானத்தின் தவறுகளை எடுத்து உரைப்பதும், எடுத்து உறைக்கக் கூறுவதும் கூட அவசியமாகின்றது.

தமிழர் தரப்பு நீதியாகவே நடக்கிறது; தனது உரிமைக்கான போராட்டத்தை நியாயவழியிலேயே முன்னெடுக்கின்றது என்பதை சர்வதேச மயப்படுத்தும் பிரசார உத்தி வெறுமனே புலிகளுக்கு மட்டுமேயுரிய தனிக் கடமையல்ல. புலிகள் யாருக்காக தம்முயிரையும் துச்சமென மதித்து ஒப்பற்ற தியாகங்களைப் புரிகின்றார்களோ, அந்த மக்களினதும் பொறுப்பு அது. தாயகத்திலும், புலம்பெயர்நாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரும் இந்தப் பிரசாரத்திலும், பரப்புரையிலும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பை வழங்க வேண்டும். அப்படி அவர்கள் தமது கடமையை முன்னெடுப்பதற்கான யதார்த்த நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது புலிகளின் பொறுப்பு.

ஈழத் தமிழர்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை வெறும் 'பயங்கரவாதமாக' சித்திரித்துக் கொச்சைப் படுத்த முயலும் சர்வதேச சதிவலைப் பின்னலை, நேர்மைத் திறத்துடன் நடப்பதன் மூலம் முறியடிக்க முழுத் தமிழ்ச் சமூகமே தயாராக வேண்டும் . காலத்தின் கட்டாயம் இதுவாகும்.

# அரச காணி குடியிருப்பாளர்களுக்கு உரிமம் இல்லை; அபிவிருத்தி முடக்கம்

## மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் கவலை



யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அரச மற்றும் கோயில் காணிகளில் வசிப்பவர்களுக்கு காணி உரிமம் வழங்கப்படாததால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

- இப்படிக் கூறினார் யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம்.

நகரப்பகுதியில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்குவது தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.நகரப்பகுதியில் வசிக்கும் மக்களின் 20 சதவீதமானவர்கள் நிரந்தரக் காணியற்றவர்கள். அவர்கள் அரச மற்றும் ஆலயக் காணிகளிலேயே வீடுகளை அமைத்து வசித்துவருகின்றனர்.

அந்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த - அவர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க- பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அந்த நிறுவனங்களுக்கு குடியிருப்பாளர்களின் காணி உறுதிகள் வழங்கப்படவேண்டும். குடியிருப்பாளர்களுக்கு நிரந்தரமாகக் காணி இருந்தால் மட்டுமே அந்த நிறுவனங்கள் உதவிகளை வழங்கும்.

ஐ.நா.மனித குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மலசலகூடம், வீதிகள் போன்றவற்றை அமைக்க முடியும். இதற்குப் போதிய நிதி உதவிகளை வழங்க அந்த நிறுவனம் முன் வந்துள்ளது.

இந்த உதவிகள் மக்களுக்கு கிட்ட வசதியாக அரச காணிகளில் இருப்பவர்களுக்கு இலவசமாக காணியை வழங்க அரசு முன்வரவேண்டும்.

அதேபோன்று ஆலயங்களில் வசிப்பவர்களுக்கு அன்பளிப்பாக அல்லது சிறு தொகையுடன் காணிகளை வழங்க ஆலய நிர்வாகங்கள் முன்வரவேண்டும் - என்றார் அவர். (எ-3)

# பண்ணைப் பாலத்திற்கு மாற்றீடான கடல்போக்குவரத்து பகலில் மட்டுமே

## கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், பண்ணைப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ள நாள்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாண- தீவகத்திற்கிடையிலான கடல்வழிப் போக்குவரத்து பகல் வேளையில் மட்டுமே இடம்பெறும்.

புதிய பாலம் அமைக்கப்படும் காலத்தில் அதற்கு மாற்றீடாக கடல்வழிப் பயணத்தை நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுள்ள யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

புதிய பாலம் பொருத்துவதற்காக பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்து எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடல்வழிப் போக்குவரத்து காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை இடம்பெறும். நோயாளர்கள் அவசரமாக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட வேண்டியிருந்தால் விசேடமாக கடல் போக்குவரத்தை மேற்கொள்ள உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

யாழ்.மத்திய பஸ்நிலையத்திலிருந்து பஸ்கள் மூலம் தீவுப்பகுதிகளுக்குப் பயணிப்பவர்கள் பண்ணைப் பாலத் திற்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இறங்குதுறையில் இறக்கி விடப்படுவர். பின்னர் அவர்கள் இயந்திரப்படகின் உதவியுடன் பாலத்தின் மறுகரையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இறங்குதுறைக்கு அழைத்துச் செல்லப் படுவர். அங்கு தீவுப்பகுதியின் பல் வேறு பகுதிகளுக்குமான பஸ்கள் தயார் நிலையில் தரித்து நிற்கும். இவற்றில் அவர்கள் தமது பயணத்தைத் தொடர முடியும்.

அதேபோல், தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிப்பவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளும் இதே ஒழுங்கில் செய்துகொடுக்கப்படும். பஸ்ஸில் பயணிப்பவர்களிடமிருந்து கடல் போக்குவரத்துக்கென கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது. குறிப்பாக- மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் முதலிய தமது சொந்த வாகனங்களின் பயணிப்பவர்களும் இயந்திரப்படகின் உதவியுடன் பாலத்தைக்கடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்களிடமிருந்தும் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

வியாபார நோக்கில் பொருள்களை எடுத்துச் செல்பவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படும்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் 10 இயந்திரப் படகுகள் மேற்படி பயணச் சேவையை மேற்கொள்ளவுள்ளன.

இந்த விசேட போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மேற்கொள்ளும். (எ-ரி)

**நாளை**

புரட்டாதி 26
புதன்கிழமை
12.10.2005
திதி: நவமி
காலை 0[illegible] 03 வரை
நட்சத்திரம் : திருவோணம்
பின்னிரவு 01.14 வரை
சுபநேரம்: 04.32 - 06.02
ராகுகாலம்: 12.02 - 01.32
(யாவும் பழைய நேரப்படி)

சுனாமி பாதித்தவர்களுக்கான —

# தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிக்கு நோர்வே ரூ.18 கோடி வழங்கியது

இலங்கையில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண வேலைகளுக்கென நோர்வே அரசு, சர்வதேச தொழிலாளர்கள் ஸ்தாபனத்திற்கு 18 கோடி ரூபா வழங்கியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான சமூகங்களுக்கிடையில வறுமையைக் குறைக்கவும் -

பொருளாதார சீரமைப்பு கலாசார மேம்பாட்டுக்கு உதவவும் நோர்வே அரசு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்துடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் அலுவலர் பயிற்சி வழிகாட்டல்களும் நடைமுறைகளும் அறிமுகப்படுத்தல், முகாமைத்துவ தகவல் அமைப்பை நிறுவுதல், தற்காலிக அலுவலர்களை நியமித்தல், கணனி கருவிகளை நிறுவுதல் - ஆராய்ச்சிகள் மேற்கொள்ளல், புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், பிரசுரங்களை வெளியிடுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுக்குட்பட்ட 12 மாத காலத்தில் இத்திட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாகத் தெரிகின்றது. (ப)

**உதயவாக்கு**

அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது. நாம் கண்டு அஞ்சும் மனிதரிடமும் அன்பு செலுத்த முடியாது.
- ஓர் அறிஞர்

**'காடு அழிப்பதைத் தடுத்து சூழலைப் பாதுகாப்போம்'**



# மாலதியின் வீரம் செறிந்த வாழ்வு நம் வழித்தோன்றல்களுக்கு வழிகாட்டி

## நினைவு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.11

தமிழ்ப்பெண்களின் வியத்தகு வீரத்தை சங்க நூல்கள் பறைசாற்றுகின்றன. இந்த வீராங்கனைகளின் புகழை புறநானூறு வியந்துபாடுகிறது. இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற அளவுக்கு - தமிழீழத்தை மலர வைப்பதற்காக - உயிரை மாய்த்தவள்தான் மாலதி. அவளது வீரம் செறிந்த வாழ்வு எமக்கும் எம் வழித்தோன்றல்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

முதல் பெண்புலிப் போராளி லெப்டினன்ட் மாலதியின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்று கோப்பாய் தரவைப் பகுதியில் நடைபெற்றது. அதில் ஈழவேந்தன் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

''ஊர் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கிறது. விண்மீன்கள் மட்டும் எம் வீரர்களுடன் சேர்ந்து விழித்திருக்கின்றன''. எங்கும் ஒரே அமைதி நேரம் 1 மணி 15 நிமிடம். திடீரென்று அமைதியைக் குலைத்த வண்ணம் வேட்டொலிகள் முழங்குகின்றன. ஒரு நொடியில் அமைதி குலைந்தது. மீண்டும் போர் தொடங்கிவிட்டது. அமைதி காக்க வென வந்தவர்கள் எமது மண்ணை ஆக்கிரமிக்கும் நோக்கில் போரைத் தொடங்கிவிட்டார்கள்.

கோப்பாய் - கைதடி வெளியில் இந்திய இராணுவத்திற்கு எதிராக முதலாவது சண்டை நடைபெற்றக்கொண்டிருக்கிறது. சண்டை உக்கிரமாக நடக்கின்றது. சண்டையில் எழும் வேட்டுச் சத்தங்கள் காற்றோடு காற்றாக கலந்து தமிழீழம் எங்கும் சண்டை தொடங்கிவிட்டது என்பதை பறை சாற்றுகிறது.

''நான் காயப்பட்டிட்டேன், என்ர ஆயுதத்தைப் பிடியுங்கோ, என்ர ஆயுதத்தைக் காப்பாற்றுங்கோ'' ஒலித்துக் கொண்டிருக்கும் ரவைகளினதும், குண்டுகளினதும் ஓசையின் ஊடே மாலதியின் குரலும் சேர்ந்து ஒலிக்கின்றது.

இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் தோழிகளின் செவிகளில் மாலதியின் அந்தச் செய்தி...

எதிர்த்து வரும் ரவைகளினூடே விஜி மெல்லத் தவழ்ந்து சென்று தோழியைக் காப்பாற்றும் பணியில்...

''என்ர ஆயுதம் பத்திரம் என்னை விட்டு விட்டு என்ர ஆயுதத்தைப் பிடி விஜி''

''ஓ! நான் ஆயுதத்தைப் பிடிக்கிறேன் முதலிலே நீ வா மாலதி''

'' நான் சொல்லுறதை முதலிலே கேள்''

''இல்லை நீ வா முதலில்''

ரவை மழையின் நடுவே தோழிகள் இருவரினதும் வாக்குவாதம் தொடர்கின்றது.

''முதலிலே என்ர ஆயுதம் பத்திரம் விஜி, நீ முதலில் அதைப் பிடி''

மாலதியின் வேண்டுகோளைத் தொடர்ந்து விஜி ஆயுதத் தைப் பெற்றுக் கொள்கிறாள்.

''சரி கொண்டு போ நீ ஓடித் தப்பு விஜி''

'' இல்லை நான் உன்னை விட்டுட்டுப் போகமாட்டேன் நீயும் என்னோட வா''

''என்னவிடு சொன்னால் கேள், வீணாகக் கஷ்டப்படாதே நான் குப்பி கடிச்சிட்டன் இப்படியே விட்டு விட்டு என்ர ஆயுதத்தைக் கொண்டு போ விஜி''

இது 'சுதந்திரத்தைத் தேடி' என்ற தலைப்பில் லெப்.மாலதி பற்றி வெளிவந்துள்ள வெளியீடு கல்மனதையும் கசிந்துருகச் செய்வது உறுதி.

**உயிர் பெரிதல்ல ஆயுதமே பெரிது**

மாலதியின் உரையாடலில் நாம் உற்றுக் கவனிக்க வேண்டியது மாலதிக்கு தன் உயிர் பெரிதல்ல. ஆனால் தான் வைத்திருந்த ஆயுதம்தான் பெரிது. தான் இல்லாத காலத் திலும் தன் ஆயுதம் காப்பாற்றப்படு கின்றபோது அது எம் போர் வலுப் பெறுவதற்கு துணைநிற்கும் என்பது மாலதியின் உறுதியான நம் பிக்கை.

புலிகளின்முதல் பெண் மாவீரரான மாலதி மறைந்து 18 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால், அவளுடைய கனவுகளும் நினைவுகளும் எம் உணர்வுகளைத் தூண்டியபடி இருக்கின்றன. எம் விடுதலை வேட்கைக்கு ஊன்றுகோளாக, உரமாக விளங்குகின்றன.

மாலதி ஒரு சாதாரண குடும்பத்தில் மன்னாரில் 1967 இல் தை மாதம் 4ஆம் திகதி பிறந்தாள். தனது 17 ஆவது அகவையில் விடுதலைப் புலி இயக்கத்தில் தன்னை ஒன்று படுத்துகிறாள் 1987 இல் தனது 20 ஆவது அகவையில் களத்தில் தமிழீழ மண்ணைக் காக்க தன்னை அர்ப்பணிக்கிறாள். உடல் மண்ணுக்கு உயிர் தமிழீழ மண்ணை மீட்பதற்காக மடிந்தது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## வர்த்தக சட்டங்களை குடாநாட்டில்அமுல்படுத்துவது குறித்து ஆராய்வு

வடமராட்சி,ஒக்.11

வர்த்தக சட்டங்களை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்து வது குறித்து யாழ். மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபரு டன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில்வடவலய உதவித் தொழில் ஆணையாளர் சி.முத்துக்குமாரசுவாமி, மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கருணேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வர்த்தக சட்ட ஒழுங்கு நடைமுறை, தொழிலாளர் சட்டங்களை யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தல், ஊழியர் சேமலாப நிதிக் கையாளல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

(த-173-202)

## தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.11

பாடசாலைகளில் அடுத்த ஆண்டில் 10ஆம் தர மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பாடம் போதிப்பது தொடர்பான செயலமர்வு யாழ்.மத்திய கல்லூரியில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலர்மர்வில் அதிபர்களையும் தகவல் தொழில்நுட்ப பாடம் போதிக்கும் ஆசிரியர்களில் தலா ஒவ்வொருவரையும் கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது. (ஐ)

## விதை நெல் விநியோகம்

வலி.தெற்கு, ஒக்.11

இவ்வருடம் பெரும்போக நெற்செய்கைக்கு வேண்டிய விதை நெல் உடுவில் கமநலசேவை நிலையத்தினூடாக பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

உடுவில் கமநல சேவை நிலையத்தில் ஏற்கனவே விதை நெல்லுக்காகப் பதிவு செய்த விவசாயிகளுக்கு ஏ.ரி.353, ஏ.ரி.402, பி.டபிள்யூ. 361 போன்ற நெல்லினங்கள் வழங்கப்படுகின்றன.

கமநல சேவை நிலையத்தில் விதை நெல் லுக்கான பதிவு செய்து, இதுவரை நெல்லைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் உடனடியாக விதை நெல் லைப் பெற்றுக் கொள்ளுமாறு பெரும் பாக உத்தியோகத்தர் தெரி வித்துள்ளார்.

---

**மாவை கொல்லங்கலட்டி**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**
**மானம்பு உற்சவ விஞ்ஞாபனம்**

12-10-2005 புதன்கிழமை 12 மணிக்கு
மானம்பு உற்சவம் நடைபெறும்.
முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை தடைமுகாமுக்கு வரவும்.
கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படும்.
அன்னதானம் வழங்கப்படும்.

(41239) (24-16-11) - அறங்காவலர்.

---

**பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலிகள்**



அன்னையின் மடியில் 17 - 07 - 1960

**அமரர் கந்தையா ஜீவரட்ணம்**
(குமார்- மினிபஸ், சாரதி)

திதி: தசமி 11 - 10 - 2005



ஆண்டவன் அரவணைப்பில் 28 - 09 - 1990

**திருமதி சுமதி ஜீவரட்ணம்**

பதினைந்தாண்டுகள் பறந்தேயோடின!
பரிதவித்தே நாம் பதியினிலே வாடுகின்றோம்
பாதகர்கள் புரிந்த பாதகச் செயலினாலே
பாரினைவிட்டே பாதியில் சென்றீர்....!

இல.7. சென்மேரிஸ்
2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
ஐயா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

---


**சிறுவர் கணனிப் பூங்கா**

# COMPUTER EXPRESS

**Institute of Information Technology**

No 15, Sirambaiyadi Lane, Jaffna
Tele: - 021-222 8250. 0777-222422

யாழ் நகரில் கணனித்தொழினுட்ப துறையில் தன்னிகரில்லா தனித்துவமான சேவையாற்றிவரும் எமது நிறுவனம் சிறுவர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் கணனிப்பூங்காவினை வெகு விமரிசையாக ஆரம்பித்துள்ளது. இங்கு சிறுவர்களிற்கான கணனிப்பயிற்சியும் வகுப்புக்களும் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் குழாமினால் நடாத்தப்படும்.

***KIDS Program***

1) Introduction to Computer
2) Fundamentals of Computer Technology
3) MS Paint
4) Introduction to MS Word
5) Introduction to MS Excel
6) Introduction to MS Power point
7) Internet & E-Mail
8) Intelligent Games

Course Fee 500/=

**THEORY BASE ON**
**LEARN IT YOUR SELF**
**Book Part (I)**
*(Duration: - 3 Months)*

***Advance KIDS Program***

1) Introduction to Computer
2) Fundamentals of Computer Technology
3) MS Word
4) MS Excel
5) MS Power point
6) Internet & E-Mail
7) Introduction to Photoshop
8) Intelligent Games

Course Fee 750/=

**THEORY BASE ON**
**LEARN IT YOUR SELF**
**Book Part (II)**
*(Duration: - 4 Months)*

வகுப்புக்கள் ஆரம்பம:-
(1) Batch I : - 12/10/2005 - 03.00-04.00 pm
(2) Batch II : - 15/10/2005 - 05.00-06.00 pm
(3) Batch III : - 19/10/2005 - 04.00-05.00 pm

*விஜயதசமியன்று மாணவர்களிற்கான பதிவுகளும் வகுப்புக்களும் நடைபெறும்.*


---

## துயர் பகிர்கின்றோம்

ஆசிரியர் கிருஷ்ணகுமாரின் தந்தையார்

**கிட்டிணன் நவரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், நலன்புரிச்சங்கம்,
யா/விக்னேஸ்வராக் கல்லூரி.

(41233)(32-11-16)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா கந்தசாமி



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி அவர்கள் 04.10.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் சின்னையா (செட்டியார்), அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் பூரணியம்மாவின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (சுவிஸ்), நாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சோதிமலர், பிரேமரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீணா, விதுர்ஷன், ஹரிசிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் சுப்பிரமணியம், கணேஸ், ஸ்ரீஸ்கந்தராசா, தங்கச்சியம்மா, நேசம்மா, காலஞ்சென்ற கற்பகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவியின் அன்புமிகு வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2005) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீமுருகவாசா,*
*நவிண்டில் றோட்,*
*பொலிகண்டி.*

*தகவல்:*
**மகன் க.ரவீந்திரன்**

(41234)(32-11-16)

### திருமதி செல்வராணி பாலசுந்தரம்



ஈவினையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி பாலசுந்தரம் அவர்கள் 07.10.2005 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்துரை பாலசுந்தரம் (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்) அவர்களின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (முகாமையாளர், ருஷா திருமண மண்டபம் - கொட்டாஞ்சேனை, கொழும்பு), திருமதி பாலசௌந்தரி கரிகாலன் (பிரான்ஸ்), பாலகணேசன் (டயலொக், யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி மஞ்சுளா பாலசுப்பிரமணியம் (கொழும்பு), இ.கரிகாலன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புமிகு மாமியும் கஜானன் (கொழும்பு), கௌதம் (பிரான்ஸ்), மதுமிதா (பிரான்ஸ்), சஞ்சீவ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புநிறை பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2005) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை விலங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவான்,*
தொலைபேசி: 0777 425528, 0777 592565

*தகவல்:*
**குடும்பத்தினர்**

(41241)

# உயர்தொழில்நுட்ப மாணவருக்கு 20ஆம் திகதி பட்டமளிப்பு விழா

## கொழும்பில் நடைபெற ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிறுவனத்தில் கடந்த 1996ஆம், 1997ஆம், 1998ஆம், 1999ஆம், 2000ஆம் ஆண்டுகளில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA), உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா(HNDC),தேசிய ஆங்கில டிப்ளோமா (NDE), தேசிய வணிக டிப்ளோமா (NDBF) கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கே இந்தப் பட்டமளிப்பு நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்பவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கினை யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர் ஒன்றியம் செய்துள்ளது.

பட்டச்சான்றிதழ் பெறத் தகுதியுள்ள சகல மாணவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாண உயர்தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் ஒன்றுகூடி தங்களது வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு நிறுவனத்தின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

(த-204)

# 60 பவுண் நகை, 35 ஆயிரம் ரூபா பணம் மட்டுவில் பகுதி வீடொன்றில் திருட்டு

தென்மராட்சி,ஒக்.11

வீட்டினுள்ளே படுத்திருந்த மூன்று பெண்களின் வாய்க்குள் துணியைப் புகுத்திவிட்டு அங்கிருந்த 60 தங்கப்பவுண் நகைகளையும் 35 ஆயிரம் ரூபா பணத்தினையும் திருடர்கள் அபகரித்துச் சென்றனர்.

இச்சம்பவம் மட்டுவில் தெற்கு, மாவடி மூலை என்னுமிடத்தில் கடந்த 4ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

வீட்டு ஜன்னல் கம்பியினை அறுத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெண்களின் வாய்க்குள் துணியினை அடைந்து விட்டு இத்திருட்டினை மேற்கொண்டனர் எனவும், கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிநாடொன்றிலிருந்து அனுப்பப் பட்ட இந்த நகைகள் ஒரு தடவை கூட யாரும் அணியாத நிலையில் அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த-117)

# சிற்றூர்திகள் வழி அனுமதிப்பத்திரம் இன்றி பயணிகள் சேவையில் ஈடுபட முடியாது

## யாழ்.மோட்டார் திணைக்கள ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சகல தனியார் பஸ்களும் மாவட்ட செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பயணிகள் சேவை வழி அனுமதிப் பத்திரம்(Route Permit) பெற்ற பின்னரே சேவையில் ஈடுபடமுடியும்.

- இவ்வாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட ஒருவர் குறிப்பிட்ட பஸ்ஸினை விற்பனை செய்வதாக இருந்தால் பஸ் வண்டியை மட்டுமே விற்பனை செய்ய முடியும். அவ்வாகனத்தின் வழி அனுமதியை (Route Permit) எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யமுடியாது. ஆனால், விற்பனை செய்யப்பட்ட சிற்றூர்திக்குப் பதிலாக வேறொரு பஸ்ஸை குறித்த காலப் பகுதிக்குள் கொள்வனவு செய்து பஸ் மாற்றத்தை மெற்கொள்ளமுடியும்.

அத்துடன், பஸ் வண்டி ஒன்றை புதிதாகக் கொள்வனவு செய்யும் ஒருவர் யாராவது ஒருவரிடமிருந்து பஸ்ஸை மட்டுமே கொள்வனவு செய்யமுடியும். கொள்வனவு செய்யும் பஸ் ஏற்கனவே பாதை ஒன்றின் வழி அனுமதிப்பத்திரம் பெற்று சேவையாற்றியிருப்பின் அப்பாதை அனுமதியுடன் (Route Permit) வாகனத்தைக் கொள்வனவு செய்ய முடியாது.

அத்துடன், கொள்வனவு செய்தவரிடம் ஏற்கனவே பயணிகள் சேவைக்கான பாதை அனுமதி இல்லாதவிடத்து அப்பாதையின் ஊடாகவோ அல்லது வேறுபாதை ஒன்றின் ஊடாகவோ இவ்வாகனத்தைச் சேவையில் ஈடுபடுத்தமுடியாது என்பதை கவனத்திற் கொள்ளவும். மேலும் தற்போது யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பாதைகளிலும் தேவைக்கு மேலதிகமாக தனியார் பஸ்கள் சேவையாற்றுவதால் புதிய பாதை வழி அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது முற்றுமுழுதாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனையும் கவனத்தில்கொள்ளவும். இலங்கை முழுவதிலும் புதிய வழி அனுமதிப்பத்திரம் வழங்குவது மறுஅறிவித்தல்வரும்வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தடை செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது என்று ஆணையாளர் மேலும் கூறினார்.

(எ-202-203)

# சிறப்புற நடந்த முதியோர்தின விழா

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரின் சர்வதேச முதியோர், சிறுவர் தின விழா அண்மையில் கைதடி முதியோர் இல்லத்தில் சிறப்புற நடத்தப்பட்டது.

பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறுவர் நன்னடத்தை அலுவலர் க.சிவகரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு இவ்விழாவில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(எ-117)

# பேராற்றல் வழிபாட்டின் உண்மையை எடுத்துரைக்கும் ஒன்பது இரவுகள்

"ஓர் உருவம், ஒரு நாமம் அற்றவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடித்தெள்ளேணம் கொட்டோமோ?" என்பது மணிவாசகரின் திருவாசகத்தில் காணப்படும் சொற்றொடர். இறைவனுக்கு உருவமோ, வடிவமோ, பெயரோ இல்லை. எனினும் எம்மனதில் ஆண்டவனை நிலைநிறுத்துவதற்காக, எல்லையற்ற பரம்பொருளுக்கு வடிவமும் பெயரும் சூட்டி உவகையுறுகின்றோம்.

### உலகை ஏதோ ஒரு பேராற்றல் இயக்குகிறது

உலகை ஏதோவொரு பேராற்றல், சக்தி இயக்குகின்றது என்பதை கடவுட்கொள்கையை ஏற்போரும் சரி மறுப்போரும் சரி ஏற்றுள்ளனர். தன் இறுதிக்காலத்தில் கடவுள் கொள்கையை ஏற்கமறுத்த பாரதிதாசன் கூட அவரின் குரு பாரதியார் பாடச் சொன்னபோது பாடிய முதற் பாடலின் வரிகள்

*"எங்கெங்கு காணினும் சக்தியடா-*
*அவள்*
*ஏழ்கடல் வண்ணமடா"*

என்று பாடினார். இங்கிலாந்தின் தலைசிறந்த இலக்கிய அறிஞர், நாடக ஆசிரியர் பேனாட்ஷோ கடவுள் கொள்கையை ஏற்றவர் என்று கூறமுடியாது.

ஆனால், உலகை ஏதோவொரு சக்தி இயக்குகிறது என்பதை உலக ஆற்றல் (World Force) அல்லது உயிராற்றல் (Soul Force) என்று குறிப்பிட்டுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிவியல் அறிஞர் தனது சார்பு நிலைக்கொள்கையால் (Theory of Relativity) அழியாப்புகழ் பெற்ற ஐன்ரைன் (Einestain) அவர்கள் துருவித்துருவி பல ஆய்வுகள் செய்த நிலையில் ஓர் எல்லைக்கு மேல்தான் ஆய்வுகள் மேற்கொள்ளமுடியாது. ஒரு சக்தி தன்னை தடுத்ததாகக் கூறுகிறார். அவர் குறிக்கின்ற அணு அல்லது கோன் என்ற சொற்களைத் தான் "அணுவுக்கு அணுவாக, கோனுக்கு கோனாக இறைவன் இருக்கிறான்" என்று 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மணிவாசகர் கூறியுள்ளார்.


### பாரதி வியந்து பாடிய சக்தி

இச்சமயச் சான்றோர் அன்று கூறிய கருத்துக்களைத் தான் இன்றைய அறிவியலுலகம் தன் சொற்களில் விளக்குகிறது. விடுதலைக் கவிஞன் என்று வாழ்த்தப்படும் பாரதி கூட அவர் பாடிய விடுதலைப் பாடல்களை விஞ்சுமளவிற்கு இறைவனைப் பல்வேறு நிலையில் பாடியமைக்கு சான்றுகளுண்டு.

இவர் "சக்தி" பற்றிப் பாடிய பாடல்கள் எம்மைப் பக்தியின் உச்சநிலைக்கு அழைத்துச் செல்கின்றது. இவற்றை எல்லாம் விரித்தெழுதுதற்கு எமக்கு வாய்ப்பில்லை. எனவே, அவர் பாடிய பாடல் ஒரு சிலவற்றை மட்டும் இங்கு எடுத்தாளுகின்றோம்.

*"ஓம் சக்திமிசை பாடல் பல பாடு*
*ஓம் சக்தி சக்தி என்று தாளம் போடு*
*சக்தி தரும் செய்கை நிலம் தனிலே*
*சிவசக்தி வெறிகொண்டு களித்தாடு"*

என்ற பாடல் சக்தி வழிபாடு பற்றி அவருடைய உள்ளுணர்வுக்கு தலையாய எடுத்துக் காட்டாகும்.



உருவமற்ற இறைவனை நாம் ஆண் வடிவிலும் பெண் வடிவிலும் வழிபடுகின்றோம். ஆண் வடிவை விட பெண் வடிவில் வழிபடும் பொழுது எம் உள்ளம் கூடிய நிறைவு பெறுகிறது. சக்திதான் சிவனை இயக்குகிறது. சக்தியின்றேல் சிவம் சவம் என்று கூறுமளவிற்கு உயிரூட்டுமாற்றல் சக்திக்குத் தான் உண்டு.

பெண்மைக்கு பெருமையுண்டு எனினும் பெண்மை தாய்மையடைகின்றபோது அது அடைகின்ற பெருநிலை வியக்கத்தக்கது. உலகியல் நிலையில் கூட மொழியை தாய் மொழி என்றும், நாட்டைத் தாய்நாடு என்றும் அழைப்பது மரபு. இறைவனைக் கூட தந்தை நிலையில் வைத்துப் பேசுவதை விட தாயின் நிலையில் வைத்துப் பேசுவதில் தான் அடியார்கள் பெருமிதமும் பேருவகையும் அடைகிறார்கள்.

### ஒன்பது இரவுகளின் ஒப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டும் நவராத்திரி

சிவனுக்கோ சிவராத்தி ஒரு நாள் தான் கொண்டாடப்படுகிறது. ஆனால், சக்திக்கோ ஒன்பது நாள்கள் கொண்டாடப்படுகிறது. "பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா" என்ற பாரதியார் பாடல் இங்கு மேலும் சிறப்புப் பெறுகின்றது. உலகில் எம்வாழ்வு நிறைவலுப்பெற வேண்டின் எமக்கு கல்வி, செல்வம், வீரம் என்ற மூன்றும் வேண்டும். நவராத்திரியின் முதல் நாள்கள் வீரத்தைக் குறிக்க கொற்றவை வழிபாடு இடம்பெறுகின்றது. இடையில் உள்ள மூன்று நாள்கள் செல்வத்தைக் குறிக்க திருமகள் அல்லது அலைமகள் விழா கொண்டாடப்படுகிறது. இறுதி மூன்று நாள்கள் கல்வியையும் கலையையும் குறிக்கின்ற நிலையில் கலைமகளை வழிபடுகின்றோம். வேறு சொற்களில் விளம்பின் மலைமகள், அலைமகள், கலைமகள் என இவ்விழா சிறப்புறுகிறது. வீரம் வாழ்வுக்குத் தேவை என்பதையொட்டிய கருத்தில் வேற்றுமையில்லை.

பண்டைய தமிழ் இலக்கியங்கள் வீரத்தையும், காதலையும் தான் வியந்து பேசுகின்றன. புறநானூறு வீரத்தைப் புகழ்ந்து பேசும் முறை எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஆனால் வீரம் எவ்வளவு தான் சிறப்பாக விளங்கினும் அது முழுமையாக பயன் பெற செல்வமும் கல்வியும் தேவை. செல்வமும் கல்வியும் அற்ற நிலையில் வீரம் செம்மையுறுவதற்கு வாய்ப்பில்லை.

செல்வத்தின் நிலை பற்றி நோக்குவோமாயின் "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று வள்ளுவர் அடித்துக் கூறும் கூற்று இவ்வுலகில் நாம் சிறப்புற்று வாழ பொருள் தேவை என்பதை விளக்குகிறது. "இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்" என்ற ஔவையின் கூற்றிற்கு அமைய பொருளற்றவனை மனைவியும் சரி தாயும் சரி ஒடுக்கிவிடுவதை எடுத்துக் காட்டுகிறது. " பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்" "பணம் பாதாளம் மட்டும் பாயும்" என்பவை எல்லாம் வெறும் பழமொழிகளல்ல. மாறாக அவை பொருள் பொதிந்தவை. எனவேதான் பொருள் அல்லது செல்வம் உருவகப்படுத்தப்பட்டு திருமகள் வழிபாடாக மலர்ந்துள்ளது.

ஓர் இனத்திற்கு தன்மானத்தைத் தருவது வீரம், எனவே, வீரம் செறிந்த வாழ்வை நாம் வியந்து போற்றுகின்றோம். கோழைத்தனத்தை அறவே வெறுக்கின்றோம். சீராக வாழ செல்வம் வேண்டுமெனக் கூறும் நாம், கல்வியால் பண்படுத்தப்படாத வீரம் முட்டாள்தனமான செயலுக்கும், தேவையற்ற கொலை, கொள்ளைக்கும் பயன்படுத்தப்படக்கூடும் என அஞ்சியே வீரத்தை வியந்து போற்றுகின்ற நாம் கல்விக்கு முதன்மை கொடுக்கின்றோம்.

மன்னன் புகழ் நாட்டின் எல்லைக்குள் அமைந்து காணப்படும்போது, கற்ற அறிஞருடைய புகழ் நாடு கடந்த நிலையில் போற்றப்படுகிறது. "கற்றோர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு" என்ற கூற்று கல்வியின் சிறப்பு வலியுறுத்துகிறது. இறைவனின் இன்னருளை பாடிய தமிழ் ஞானசம்பந்தர் "கல்லா நெஞ்சில் நில்லான் இறைவன்" என்ற பாடல் வரிவாயிலாக கற்றவர் உள்ளத்தில் தான் இறைவன் குடிகொள்ளுவான் என்ற கூற்று எவ்வளவு பொருள் பொதிந்ததாக அமைகிறது. அறிவே ஆற்றல் "Knowledge is Power" என்ற கூற்றும் அறிவின் ஆற்றலை எமக்கு உணர்த்துகின்றன. இவ்விதம் எமக்கு வாழ்வும் வளமும் அளிக்கும் கல்விக்கு முதன்மை கொடுக்கும் நோக்கில் தான் கலைவாணி வழிபாடு தோன்றியது. இக்கலைமகளை கலைவாணி, நாமகள், சரஸ்வதி எனப் பல பெயர் கொண்டு அவளது புகழை கவிஞர்கள் பாடி மகிழ்கிறார்கள்.

### பாரதி கண்ட பாரதி

"பாரதி" என்ற சொல் கலைமகளைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். எனவே, தான் பாரதி கண்ட பாரதி என்ற துணைத் தலைப்புத் தரப்பட்டது. கடவுளை எவரும் தம் விருப்பப்படி தன் மனதில் படியும்படி வழிபடுவதற்கு உரித்துடையவர்கள். எனவே பாரதியும் கலைமகளைத் தன் நிலையில் இருந்து பார்க்கிறார். கலைமகளை "மந்திரத்தை முணுமுணுத்து வழிபடுவதில்" அவருக்கு நம்பிக்கை இல்லை. ஆலயம் கட்டி வழிபடுவதிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை. அன்னசத்திரம் ஆயிரம் நிலைநாட்டிலும் அவருக்கு ஈடுபாடில்லை.

**மா.க.ஈழவேந்தன் (நா.உ)**

ஆனால், "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்து" தான் கலைமகளை வழிபட விரும்புகிறார் பாரதி. இந்த எழுத்தறிவித்தல் பணி ஏற்றமுற, நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச் சொல்லாவது அருளீர். ஆண்மையாளார் உழைப்பை நல்கீர், என்று ஏழைகளுக்கு எழுத்தறிவிப்பதற்காக பள்ளிக்கூடங் கட்டுவதற்கு செல்வந்தர்களை பெரும் நிதி தரும்படியும் நிதிகுறைந்தவர்களை சில்லறை தரும்படியும் இருநிலையும் அற்றவர்களை படிப்பின் பாங்கினை எடுத்துரைப்பதற்கு பரப்புரையாற்றுவதற்கு வாய்ச் சொல்லாவது அருளீர் என்று மிகப் பணிவோடு வேண்டி நிற்கிறார்.

ஒன்பது இரவுகள் பேராற்றல் வழிபாட்டின் ஒப்பற்ற உண்மைகளை எடுத்துரைக்கின்றன. வீரம் செறிந்த வாழ்வை நாம் வேண்டி நிற்கிறோம். செல்வம் பெற்று சீரோடு நாம் வாழ விரும்புகிறோம். ஆனால் இவை அனைத்திற்கும் மேலாக கண்ணைத் திறக்கும் கல்விக்கு முதன்மை கொடுத்து அது தான் உண்மையான கலைமகள் வழிபாடு என்பதை உணர்ந்து கலைமகள் வழிபாட்டில் ஈடுபடுவோமாக! "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்பது என்றுமறியாத பொருள் பொதிந்த கூற்றாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஓட்டோமரிக் பாத்மிஷின், டீபிறிஜ், ஐஸ் கிறீம் கடைக்குரிய பந்தல், சுற்று அடைப்புகள், கதிரைகள், மேசைகள், பிளாஸ்ரிக் போட்டுகள், உழுந்து அரைக்கும் கிரைண்டர், 3 வேஸ், எயர் கெண்டிஷனர், டெக்னிக் செற் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.செல்வராணி, குலம் கிறீம் ஹவுஸ் அருகில், ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

(41140)

## காணி விற்பனைக்கு

இணுவில், பருத்தியடைப்பு பிள்ளையாரடி தெற்கு ஒழுங்கை, மூன்றாவது காணி 2 பரப்பு விரைவில் விற்பனைக்கு. தொடர்பு: சண்முகாநந்தன், இல.94, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (41127)

## தவறிவிட்டது

பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த சின்னராசா குணசேகரன் என்பவரது தே.அ. அட்டை (இல.752584389V) 25.09.2005 அன்று பருத்தித்துறைக்கும் - அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (41205)

## இமயம்

மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 11 நவீன நாடகங்கள். 400 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. இந்த ஆண்டு சாகித்தியப் பரிசைப் பெற்ற நூல். ரூபா 150/-
(41216)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு பரிசோதனை அறை

தென்மராட்சி,ஒக்.11

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மேலும் ஒரு வைத்திய பரிசோதனை அறை 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கவரும் மருத்துவர்களின் நலன்கருதி இந்த அறையினை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் அமைத்துள்ளனர்.

ஏற்கனவே இச் சபையினரால் வெளிநோயாளர் பிரிவுக்கெனப் பரிசோதனை அறை அமைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-117)

## அலுமினியம் பொருத்துதல் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.11

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகமும், இணைந்து இளைஞர் யுவதிகளுக்கான அலுமினியம் பொருத்தும் (அலுமினிய பிற்றிங்) பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பயிற்சியை பெற விரும்பும் இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் அச்சுவேலி ப.தெ. வள அ.கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
(எ-204)


**சாகித்யா இசை பயிலகம்**

**விஜயதசமி**

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**

*(ஒகன், ஹார்மோனியம், மெலோடிக்கா)*

*காலம்:* 12.10.2005 புதன்கிழமை

*நேரம்:* பிற்பகல் 4 மணி

*இடம்:* பலாலி வீதி, திருநெல்வேலி

*(கீன் கல்வி நிலையத்திற்கு அருகில்).*

(41210)(40-32-34-19)

**S.L.E.A.S**

**கல்வி நிர்வாக சேவை**

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

கல்வி நிர்வாகம் :- திரு.நல்லையா
(Rtd. மேல்மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்)

கிரகித்தல் :- பேராசிரியர் திரு.சண்முகதாஸ்

நுண்அறிவு :- திரு.குமாரவேல்

**புதிய பிரிவு ஆரம்பம்: 15.10.2005 (2 மணி)**

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (41219)(32-34-19)

**SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியூடான**

**பயிற்சியும் பணி நியமனமும்**

**( எட்டாவது பிரிவு )**

A/L படித்து...

சர்வதேச தரத்தில் கல்வி

**பணிநியமனம்:** ஆங்கில ஆசிரியர், உள்நாட்டு, சர்வதேச செயற்பாடுகளில் இணையதள, மென்பொருள், கற்கைநெறி விருத்தியாக்கம் மற்றும் பொது நிர்வாகம்.

**பயிற்சிக்காலம் :** திங்கள் முதல் வெள்ளி 3 மாதங்கள், 9.00 - 1.00 மற்றும் 1.00 - 4.45

**கட்டணம் :** ரூபா 12000/-

**கல்வித்தகுதி :** க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

**பயிற்சிக் காலத்தின்போதும் ஊதியம் வழங்கப்படும்**

**அனுமதிக்கு 10.10.2005 மற்றும் 11.10.2005 திகதிகளில் (நாளையும் மறுதினமும்) நேரில் முதலில் வரும் 40 பேர் மட்டும் தெரிவுசெய்யப்படுவர்**

SAAMSTECH

841, Hospital Road, Jaffna. 233/4, Kasthuriyar Road, Jaffna 021 - 4591571, 077 - 3068968






இலங்கை வங்கியின் 14 Plus சேமிப்பு கணக்கு திட்டமானது இன்றைய வளரும் பிள்ளைகளுக்கு சேமிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதாகும். அதே நேரம், உங்கள் பிள்ளைகளின் அவசரத்தேவைகளுக்கான பண மீளப்பெறுதலுக்கு

Visa Electron Card ஒன்றும் இலவசமாக வழங்கபடும்.

இந்த அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

இன்றே அருகில் உள்ள இலங்கை வங்கியின் கிளைக்கு சென்று 14 Plus கணக்கை ரூபா. 3000/- செலுத்தி ஆரம்பியுங்கள்.

கையிருப்பு (Cap) முடியும் முன் முந்துங்கள்.

*விதிமுறைகளுக்கமைய

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# தமிழர் தலைநகரின் சுற்றுச்சூழலை மேம்படுத்தி முன்னோடி நகராக்குவோம்

## அறைகூவுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்ப்பாணம் தமிழீழத்தின் கலாசார நகராக விளங்குகிறது. இதன் சுற்றுச் சூழல், சுகாதாரம் என்பன மேம்படுத்தப்பட்டு ஏனைய நாடுகளுக்கு முன்னோடியாகத் திகழ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். கிராமங்களின் அபிவிருத்திக்கு சனசமூக நிலையங்கள் நல்ல களமாக அமை யும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சுண்டுக்குழி சனசமூக நிலையத்தின் 77 ஆவது ஆண்டுவிழா அண்மையில் அரங்கில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடக்கூடிய, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூடிய, எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காணக்கூடிய சமுதாயம் ஒன்று எங்களுக்குத் தேவை. நான் இந்த சனசமூக நிலையங்களிடம் கேட்பது உங்களுக்கு புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளை வேண்டிப்போடுதல், விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் ஆகியவற்றுக்கு அப்பால் இன்னும் பல கடமைகள் இருக்கின்றன.

ஒவ்வொரு கிராமத்து சனசமூக நிலைய வாசிகசாலையும் தனது கிராமத்து மக்களை கலை, கலாசாரம், பண்பாடு போன்ற சகல வழிகளிலும் வளர்த்தெடுக்க முடியும். ஒரு காலத்தில் சனசமூக நிலையம் என்பது ஒரு சில குறிக்கப்பட்ட விடயங்களை மாத்திரம் தான் கவனித்துக்கொண்டு இருந்தன. இனியும் அவ்வாறு இல்லாது நிலையங்களுடைய வேலைகளுடைய எல்லையை விரிவாக்க வேண்டும்.

மக்களுக்குப் பண்பைப் போதிப்பது மாத்திரமல்ல முக்கியமான ஒரு பிரச்சினையாக இருப்பது சுற்றுச்சூழலை பாதுகாப்பது நாங்கள் ஒரு நகரத்தில் வாழ்கின்றோம். யாழ்ப்பாண நகரமென்பது வெறுமனே யாழ். மாவட்டத்திற்கு மாத்திரமல்ல; வடக்கு - கிழக்கு, தமிழீழத்திற்கே, அது ஒரு கலாசாரத் தலைநகரமாக இருக்கின்றது. அந்தத் தலை நகரம் எப்படி இருக்கவேண்டும் என்ற சிந்தனை எமக்குவேண்டும். எமது தலைநகரம் அழகான சுகாதாரத்தைப் பாதுகாக்கின்ற ஓர் இடமாக - ஒரு முன்னோடியான நகரமாக இருக்கவேண்டும். நாங்கள் பல நாடுகளுக்குப் போகின்றோம். பல திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரங்களைப் பார்க்கின்றோம். நகரத்தில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட விடயங்களைப் பார்க்கின்றோம். அப்படி வளர்ச்சியடைந்த நாடுகளுடன் நாங்கள் போட்டி போடவேண்டும். யாழ்ப்பாண மாநகரம் ஓர் அழகான நகரமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். நான் பல தடவை ஆணையாளர் அவர்களுடன் பேசியிருக்கின்றேன். நான் இந்த சனசமூக நிலைய நண்பர்களிடம் கேட்டுக்கொள்வது, சுற்றுச்சூழல் என்று கூறும் பொழுது அதில் ஒன்று பசுமை. நீங்கள் மரம், செடி, கொடிகளை நாட்டுவது, உங்கள் கிராமத்தைத் சுத்தமாக வைத்திருப்பது, பொலித்தீன் போன்ற விடயத்தை அகற்றுவதற்கு முன்னுரிமையைக் கொடுப்பது, வீதிகள் போன்றவற்றை எவ்வளவு தூரம் நீங்கள் கவனமாக அல்லது அழகாக குப்பை கூழங்களை வீதியில் கொட்டாமல் வைத்திருக்கின்றீர்கள் போன்ற பல விடயங்கள் இதற்குள் இருக்கின்றன.

ஒரு கிராமம் உண்மையாகவே ஒரு முன் மாதிரியான கிராமமாக வந்தால் ஏனைய கிராமங்கள் அதனைப் பின்தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே இருக்கின்றன.

இந்த யாழ்ப்பாண மாநகர வளர்ச்சியில், உங்களது கிராமத்து வளர்ச்சியில், கிராமத்து பண்பாட்டு வளர்ச்சியில், கிராமத்து சுற்றுச் சூழல் வளர்ச்சியில் நீங்கள் முழுமையான கவனம் எடுக்கவேண்டும். ஆண், பெண் என்ற பாகுபாடின்றி பெரியோர், சிறியோர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் இந்த விடயங்களில் கவனம் செலுத்துவோமாக இருந்தால், நாம் பல விடயங்களைச் சாதிக்கமுடியும்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக யுத்தநிறுத்தமொன்று தற்காலிகமாக அமுலுக்கு வந்துள்ளது. இக்காலத்தில் யாழ்ப்பாண மாநகரத்தினுடைய போக்குவரத்துச் சாதனங்கள் மூன்று மடங்குக்கு மேலாக அதிகரித்து இருக்கின்றன. ஆனால், வீதிகள் அகலமாக்கவில்லை. இதனால் எத்தனை விபத்துக்கள் நடக்கின்றன. எத்தனை மக்கள் அநியாயமாகச் சாகவேண்டிய சூழல் இருக்கின்றது. ஆனால், நாங்கள் வீதிப்போக்குவரத்து முறைகளைக் கடைப்பிடிக்கின்றோமா என்றால் நிச்சயமாக இல்லை. ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடின்றி 3 பேர் சமாந்தரமாக செல்லும் நிலையை இன்றும் பார்க்கின்றோம். இப்படியான சூழல்கள், இப்படியான நிலைமைகள் மாறவேண்டும் - என்றார்.

(ப-204)

# கிராமிய மன்றங்கள் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்

சங்கானை,ஒக்.11

கிராமங்களிலுள்ள மாதர், சிறுவர், முதியவர் மன்றங்களினால் சிறந்த சமுதாயத்தை உருவாக்கமுடியும். இதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இவ்வாறு சங்கானை இந்து இளைஞர், மாதர், சிறுவர், முதியவர் மன்றங்களின் ஸ்தாபகர் பொன்.சாம்பசிவம் தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச சிறுவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இந்து இளைஞர் மன்ற சிறுவர் பாடசாலையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

அதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட பொன்.சாம்பசிவம் மேலும் பேசும் போது கூறியதாவது:-

மன்றங்கள் மூலம்தான் சிறுவர்களுடைய தனித்துவமான திறமைகளை, நற்பண்புகளை வெளிக்கொணர முடியும். மன்றச் செயற்பாடுகளில் ஈடுபட அனைவரும் முன்வர வேண்டும்.

சிறுவர்களின் ஆரம்பக் கல்விக்கான அத்திபாரம் சிறந்த முறையில் இடப்படவேண்டும். இதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும், பெற்றோர்களும் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

கிராமங்களில் ஒற்றுமை மேம்பட்டு, துறைசார் வளர்ச்சிகள் பெறவேண்டுமெனில், மன்றங்கள் அவசியம் உருவாக்கப்படவேண்டும் என்றார்.

(ப-29-204)

# பயிற்சிபெறும் பெண்கள் தமது பலத்தில் வாழ முயலவேண்டும்



யாழ்ப்பாணம்,ஒக்.11

தொழிற்பயிற்சிகளைப் பெறும் பெண்கள் அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி சுய உழைப்பாளிகளாக மாற வேண்டும். தமக்குரிய பலத்தில் வாழக்கூடியவர்களாக மாற்றம் பெறவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் நோர்வேயின் (ODW) திட்ட நிதி உதவியுடன் செயற்படுத்திய 'வர்ணம் தீட்டுதல்' பயிற்சி நிறைவு நிகழ்வு அண்மையில் கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில், மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. மங்கள விளக்கினை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும், கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன திட்டப் பணிப்பாளர் கமலாம்பாள் பாலசுந்தரமும் ஏற்றினார்கள்.

வர்ணம் தீட்டுதல் பயிற்சி நெறியின் கண்காட்சியினை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் திறந்து வைத்து மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'பயிற்சி பெற்ற கலைஞர்கள் தம் திறமைகளைக் காட்சிப்படுத்தியுள்ளார்கள். சில புதுமையாக இருந்தது. எமது பெண்கள் இவ்வாறான பயிற்சிகள் பலதைப் பெற்று தொடர்ந்தும் அதில் ஈடுபடாமல் விடுவது கவலையைத்தரும் விடயம். எத்தனை பேர் பயிற்சி முடிவில் குழுவாகச் சேர்ந்து ஒரு நிறுவனமயமாக வருமானம் பெறும் நிலையை உருவாக்கியுள்ளனர் என்பது கேள்வி. பயிற்சிகளைப் பெற்றுவிட்டு மீண்டும் வீடுகளில் முடங்கிவிடுகின்றனர். தங்கிவாழும் வாழ்விற்குப் பழக்கப்பட்ட இவர்கள் தமது உரிமையை கோரும் விடயத்திலும் மிகவும் கூர்மையடையாமல் விட்டுவிடும் ஆபத்தும் உண்டு.

இத்தகைய பின்னடைவு நிலைமைகள் பயிற்சிகளிற்கு உதவும் நிறுவனங்களின் முயற்சிக்கு தோல்வியைக் கொடுக்க வழியாகின்றது. ஆனால், பெண்களிடம் இருக்கும் ஓர்மம் அவர்களின் திறமைக்குத் தடையல்ல. அவர்களால் முன்னேறமுடியும் தொடர்ந்து பெறும் பயிற்சிகளின் மூலம் அவற்றை தொழிலாக்க முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் சுய உழைப்பாளிகளாகி தமக்குரிய பலத்தில் வாழக்கூடியவர்களாக மாற்றமடையும் நிலையை உருவாக்கவேண்டும்- என்றார்.

தலைமை உரையில் மனோன்மணி சண்முகதாஸ் கூறுகையில் - ''இங்கு பெண்களின் அபிவிருத்தியை இனங்காணக்கூடியதாக உள்ளது. ஆரம்ப காலங்களில் பெண்களிடம் தாய்மை பெருமைப்படுத்தியது. இன்று பெண்களின் தேவையை உணர்த்தும் நிலையில் தமிழ்ப் பெண்களின் நிலை உள்ளது. சாதாரண வீட்டில் இருந்து உலக அரங்கில் பேசும் நிலை வரை எமது பெண்கள் இன்றுள்ளனர். புனர்வாழ்வு என ஏழ்மையன்றி அவர்தம் ஆற்றல்களை உலகறியச் செய்வதே முக்கியமானது. எனவே, பயிற்சி பெற்று விட்டோம் என்ற நினைவுகளுடன் தங்களின் அன்றாட பணிகளில் இருந்து விடுபட முடியாதவர்களாக இருக்காது தம் முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு தொடர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடுவது அசியம்'' என்றார்.

இந்நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களிற்கான சான்றிதழ்களை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும், யாழ். மாவட்ட நிறுவனப் பணிப்பாளர் யாழினி ரகுநாதனும் வழங்கிக் கௌரவித்தனர்.

(204)

# முன்னோர் அளித்த செல்வங்களான கலைகளை கற்றும் பேணியும் காப்பது எம் கடமை



நல்லூர்,ஒக்.11

எமது முன்னோர்கள் அளித்த செல்வங்களான கலைகள் பாடவிதானத்தில் இல்லாவிடினும்கூட அதனைக் கற்றும் பேணியும் காக்க வேண்டியது இளம் தலைமுறையின் கடமையாகும்.

- இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கூறினார்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2005ஆண்டுக்கான இசை நடன நாடக விழா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்டது.

விழாவில் தலைமையுரையாற்றிய செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பேசும்போது மேலும் மேலும் கூறியதாவது:-

எங்களுடைய பாரம்பரிய கலைகளான பரதநாட்டியம், கர்நாடக இசை, நாட்டுக் கூத்து போன்ற கலைகளை ரசிக்கும் பாங்கு எம் மிடையே குறைந்து வருகின்றது. இது




போன்ற நிகழ்வுகளில் மக்கள் கலந்துகொள்வதும் அரிதாக காணப்படுகின்றது. இந் நிலையில் எமது கலைகளை நாம் எவ்வாறு பேணிக் காக்க முடியும் .

ஏனைய மக்கள் தம்து கலாசாரத்தை வளர்க்க பெருந்தொகையான நிதி கிடைக்கிறது. தமிழர் கலாசாரத்தைப் பொறுத்தவரை நாங்கள் ஒதுக்கும் பணம் மிகவும் குறைவு. இதனால், எமது கலைகள் அழிந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தமது கலைகளைக் காக்க தனிநபர்கள் கூட உதவுகின்றார்கள் அது எம்மவர்களிடம் குறைவாகவே உள்ளது.

நாங்கள் எல்லா இடங்களிலும் இது போன்ற விழாக்களை நடத்துகின்றோம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இந்தப் பகுதியில் உள்ள பிரதேச செயலகங்கள் மக் களின் பங்களிப்புடன் கலாசார விழாக்களை நடத்தி கலைகளைக் காப்பதுடன் கலைஞர்களையும் கௌரவிக்கிறது. எமது கலைகளைப் பாதுகாப்பதில் பல்கலைக்கழகங்களும் பொது ஸ்தாபனங்களும் கணிசமான பங் களிப்பை வழங்கி வருகின்றன.

எம்மைப்பொறுத்தவரை படைக்கக் கூடிய கலைஞர்கள் சிறப்பான ரசிகர்கள் கூட்டத்தை உருவாக்கவேண்டும். சிறப்பான ரசிகர்கள் உருவாவதன் மூலம் எமது கலைகள் வளரமுடியும். எமது மாணவர்களை இதில் ஈடுபடுத்தல் அவசியம் என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி பேசும்போது கூறியதாவது:-

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் எமது கலைஞர்கள் எமது பாரம்பாரிய கலைகளைக் கட்டிக்காப்பதில் அக்கறையுடன் செயற்படுகிறார்கள். கலைகளைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் கையளிக்கவேண்டிய பொறுப்பை உணர்ந்து செயற்படுவது கலைஞர்களுக்கு நாங்கள் முடிந்த வரை உதவுவதன் மூலமே அவர்களது இலட்சியம் நிறைவடையும்.

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச கலாசார உத்தியோகத் தர் இ.நித்தியானந்தன், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி அகியோரும் உரையாற்றினர்.

பிரதேச செயலக காலசாரப் பேரவை இந்து மகளிர் கல்லூரி,ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் ஆகியன வழங்கிய கலை நிகழ்வுளும் இடம் பெற்றன.

(ப-111)

## சிறுவர்கள் பற்றிய ஆய்வு களப்பணி

# பட்டதாரி அலுவலர்கள் மூலம் கிராமிய மட்டத்தில் ஆரம்பிக்கப்படும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தகவல்



வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சில பகுதிகளில் சிறுவர் வீடுகளில் துன்புறுத்தப்படுகின்றனர். பலர் சிறுவர்களைவேலைக்கு அமர்த்தி துன்புறுத்துகின்றனர் என்று வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார். கிராம மட்டத்தில் சிறுவர்களின் நிலைப்பற்றிய ஆய்வு பட்டதாரி அலுவலர்கள் மூலம் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதேச மட்ட சிறுவர் பாதுகாப்பு குழுக் கூட்டம் பிரதேச செயலர் தலைமையில் சண்டிலிப்பாயில் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தொடர்ந்து பேசுகையில் இன்றைய காலகட்டங்களில் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்ட வேளையிலும் பாடசாலைக்கு மாணவர்களை பெற்றோர் அனுப்பி வைப்பதில் பின்னிற்கிறார்கள்.

வீடுகளில் வைத்து சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி துன்புறுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

விரைவில் பிரதேச செயலக பட்டதாரி அலுவலர்கள் மூலம் கிராம ரீதியான களப் பணி ஆரம்பிக்கப்படும்.

அவ்வேளைகளில் சிறுவர்களுக்கு கிராம மட்டத்தில் ஏற்படும் பாதிப்பு குறித்து ஆராய்வர்.


இன்று வெவ்வேறு பதவிப் பெயர்களில் பட்டதாரிகளை அரசு நியமனம் செய்து வருகின்றது.

இதனால், இதுவரைகாலமும் முன்னெடுத்துச் செல்லமுடியாத பலவேலைகள் விரைவில் பட்டதாரி அலுவலர்கள் மூலம் முன்னெடுத்துச் செல்லப்படலாம் - என அவர் மேலும் தெரிவித்தார்.

(ப-185)

ஸ்ரீ ராமஜெயம்

# யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்புமலர் -11.10.2005





ஸ்ரீராமஜெயம்

## ஆபத் பாந்தவனிடம் அபயம் கேட்போம்

சொல்லும் தனையும் தொழுமின் விழுமுடம்பு
செல்லும் தனையும் திருமாலை-நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்திரேல் நன்று.

ஆபத்பாந்தவன், அநாதரக்ஷகன எனப் போற்றித்துதிக்கப்படும் ஸ்ரீமத் நாராயணனை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு விளங்குவது வைஷ்ணவ சமயமாகும். ஈழத்திலே அமைந்துள்ள வைஷ்ணவ தலங்களுள் ஈழத்து திருப்பதி என போற்றப்படுவது வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில். இங்கு இந்தியாவில் உள்ள திருப்பதி ஆலயத்தை ஒத்ததாக விழாக்கள் நடைபெற்று வருகின்றன. திவ்விய மங்கள சொரூபனாக விளங்கும் பெருமாள் தன்னைச் சரண் புகுந்தோர்க்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கி அருளாட்சி புரிகின்றார். அடியார்களின் செடியாய் வல்வினைகளை தீர்க்கும் பொருட்டு இன்று திருமால் தேரேறி வருகின்றார். பெரியவற்றுள் பெரிதாகவும் அணுவுக்குள் அணுவாகவும் எங்கும் வியாபித்து விளங்கும் ஸ்ரீமந் நாராயணனை சரணடைவோம். எமது வினைகளை வேரறுத்து எமக்கு அவன் அருள்புரிவான். இன்றைய நன்நாளில் அனைவருக்கும் சர்வ மங்களம் உண்டாக ஆசி கூறி ஸ்ரீமந் நாராயணனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*
*சுபமஸ்து.*

*ஸ்ரீவத்ஸ வ. இராஜேஸ்வரக்குருக்கள் பிரதம குரு.*
*ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், வண்ணை-யாழ்.*

## ஆதீன மகாசபையினரின் ஆசிச் செய்தி

காத்தற் கடவுளாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனாக, வழிபடும் அடியார்களின் துயர் போக்கும் தூயவனாக வண்ணையில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் திருத்தலம் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம்.

தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்கின்ற மாயவனாகிய கேசவன் இன்று ஸ்ரீ தேவி பூமிதேவி சமேதராக சித்திரத் தேரிலே சிங்காரப் பவனிவரப் புறப்படுங் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

அழித்தல் தொழிலைக் குறிக்கின்ற தேர்த்திருவிழா நன்னாளில் எம் பெருமான், தீயசக்திகளைக் களைந்து பக்தர்களைக் காப்பதற்காக கோலாகலமாகப் புறப்பட்டுவிட்டான். வெண்ணெய் திருடும் கள்வன் வேங்கடேசன் எங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு கண்கவர் பவனி வருங்காட்சி காணக் கண் கோடி வேண்டும்.

ஆகவே, அலைகடலில் துயிலும் அனந்த சயனன் தமிழர் வாழ்வில் துயர் துடைத்து நல்லருள் புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி, சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.

உலகைக் காக்கும் பரம் பொருள் எம்மைக் காப்பாற்றி நல் வழிப்படுத்தி நன்னெறியில் நாம் வாழ நல்லருள் புரிய வேண்டுமென்று கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றோம்.

*"என்றும் வேண்டுவது எம் பெருமான் தண்ணருள்"*

*ஆதீன மகா சபையினர். யாழ் வண்ணை*
*ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.*

## மணித்தேரேறி வந்து மனங்குளிர வைப்பாய் ஐயா!

வெண்ணெய் தின்ற வாயானே வேங்கடேசப் பெருமானே!
வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் கேசவனே
மண்ணையுண்ட வாயானே மாண்புறு காட்சி தந்து
மணித்தேரேறி வந்து மனங்குளிர வைப்பாய் ஐயா!
கண்ணையிமை காப்பது போல் காத்தருளும் கண்ணனே
கை தொழுதே துதித்தோம் கால்களையே பிடித்தோம்!
பெண்ணையிடப்பாகம் வைத்த பெருமானின் திருவவதாரமே
போற்றியே வணங்குகின்றோம் காத்தருள வேண்டுமையா!

-திருவரன்.


மொத்த- சில்லறை விற்பனையாளர்.
ஏகாம்பரம் புடைவைமாளிகை
(72) 9, பெரியகடை வீதி யாழ்ப்பாணம். T.P:021 222 2151

நவயுகம் மகிழும் புதுமலர்ப்பூங்கா. புதுமணத்தென்றலில் பூத்து நிற்கும் நவநாகரிக நகை உலகம்
சிறி மீனாட்சி தங்க மாளிகை
இல 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:610

பத்திரிகை, பல சரக்கு விற்பனையாளர்
சிவா ஸ்ரோர்ஸ்
59, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P: 0214590684

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
சானுகா நகைமாடம்
200 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3700

அகிலன் நகைமாடம்
தங்கப்பவுன் நகை வியாபாரம் ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
AGILAN NAGAI MAADAM
240, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
240, Kasthuriar Road, Jaffna.

நம்பிக்கையான நகைகளுக்கு நாணயம்மிக்க இடம்
மொ. அம்பலவாணர் நகைமாளிகை
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன பாணி சாறி வகைகளுக்கு நாடவேண்டிய இடம்
மகாநந்தி புடைவையகம்
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P:222 2552

நல்ல தரமான மின்சாரப் பொருள்களுக்கு நாடுங்கள்
யாழ்ப்பாண மின்னகம்
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P:222 5766

மேசைத்தொலைபேசி அதிரடி விலையில்
பவர் செலூலர் ரேடிங் கம்பனி
185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7070, 071 239220, 0777 28 1521
Shop:205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 Kt.Gold Jewellery
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Fax 021 222 26972 T.P:021 2480
சாரங்கன் நகைமாடம்
இல 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 222 6059

உறுதியான உத்தரவாதம் மிக்க நகைகளுக்கு
நதியா நகைமாடம்
149, 02 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 0213479
நிதியா நகைமாடம்
99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கவுசன் மொடன் ஜுவல்லரி
129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

JIALING மோட்டோர் சைக்கிள் இலங்கையின் ஏக இறக்குமதியாளர்
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 2544

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ளலாம் நகை என்றதும் நாடவேண்டிய ஸ்தாபனம்
துர்க்கா நகைப்பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம் ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:222 2228

IIS CITY CAMPUS
181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 8060

ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்
14, ஸ்ரீவேங்கடேசன் வீதி, பொருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3493

# முல்லை. தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் வற்றாப்பளையில் சிலப்பதிகார விழா

புதுக்குடியிருப்பு,ஒக்.11

முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்ச் சங்கம் வற்றாப்பளை அம்பாள் ஆலய பரிபாலன சபையின் அனுசரணையுடன் நடத்தும் சிலப்பதிகார பெருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி காலை 8 மணிமுதல் வற்றாப்பளை அம்பாள் ஆலய கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் க.சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வற்றாப்பளை அம்மன் ஆலயத்திலிருந்து சிலம்புகூறல் ஏடு, சிலப்பதிகார நூல், கண்ணகி உருவப்படம் என்பன ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துவரப்படும்.

தேசியக் கொடியேற்றல், மங்கல விளக்கேற்றல், சிலம்பு கூறல், பாடல் இசைத்தல் என்பன நடைபெறும். தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெறும்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்னும் தலைப்பில் தமிழ்மணி அகளங்கன் உரை நிகழ்த்துவார்.

'சிலப்பதிகாரம் கூறும் தமிழர் பண்பாடும் கலாசாரமும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன் கருத்துரை நிகழ்த்துவார்.

'சிலப்பதிகாரம் கூறும் செய்திகள்' என்னும் தலைப்பில் முல்லைமணி வே.சுப்பிரமணியம் கருத்துரை வழங்குவார்.

'சிலம்பு கூறல்' பற்றிய ஆய்வுக் கண்ணோட்டத்தை முதுநிலை விரிவுரையாளர் ம.இரகுநாதன் வழங்குவார்.

பிற்பகல் நிகழ்வுகள் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

சிறப்பு நிகழ்வாக முல்லைமணி வே.சுப்பிரமணியத்தின் 'மழைக்கோலம்' (நாவல்), 'கொண்டுவந்த சீதனம்' (சிறுகதைத் தொகுப்பு) ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வு இடம்பெறும்.

'மழைக்கோலம்' நூலின் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ம.இரகுநாதனும் 'கொண்டு வந்த சீதனம்' என்ற நூலின் அறிமுக உரையை முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரனும் நிகழ்த்துவர்.

கலை நிகழ்வுகளாக 'கண்ணகியின் கற்புச் சிறப்பு பேசப்படுவது புகார் காண்டத்திலா, மதுரைக்காண்டத்திலா' என்னும் பொருளில் பட்டிமன்றமும் புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிர மணிய வித்தியாசாலை அதிபர் செ.இரவீந்திரராசாவின் நெறியாள்கையில் மாணவர் கள் வழங்கும் கோவலன் கூத்தும் இடம்பெறும். (த-353-204)

## கடற்புலித் துணைப் படைக்கு இலுப்பைக்கடவையில் பயிற்சி

பூநகரி,ஒக்.11

கடற்புலி லெப்.கேணல் நாவரசனின் நினைவாக அண்மையில் கடற்புலிகளின் துணைப் படை வீரர்களுக்கான போர்ப் பயிற்சிகள் முழங்காவிலில் ஆரம்பமானது.

இலுப்பைக்கடவை பயிற்சி ஆசிரியர் அன்பு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்புலிகளின் கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் துணைப் பொறுப்பாளர் டயஸ் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கடற்புலிகளின் கிளிநொச்சி மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.தமிழன் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். மாவீரர் லெப்.கேணல் நாவரசனின் படத்திற்கு பூநகரி முழங்காவில் பிரதேச மகளிர் போராளி ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

பயிற்சி ஆசிரியர் அன்பு துணைப்படை வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினார்.(த-403-203)

# வவுனியாவில் 27ஆம் திகதி தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு

புளியங்குளம்,ஒக்.11

தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தாயகம் என்பவற்றை அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திடம் கோரி எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களும் வவுனியா பொது அமைப்பினர்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிகழ்வைச் சிறப்பாகச் செய்வதற்கென செயலணி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணியில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உட்படப் பலர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

செயலணிக் குழுத் தலைவராக எஸ்.என்.ஜி.நாதனும் செயலாளராக ஜே.வி.கிறிஸ்தோபரும் பொருளாளராக வி.எஸ்.தேவராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று கடந்த 2ஆம் திகதி புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிசோர், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், விநோதராஜலிங்கம் ஆகியோரும் பொது அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

(த-355-203)




# இரணைமடு, சாந்தபுரம் கிராமங்களில் மினிபுயற்காற்றினால் பெரும் பாதிப்பு!

வட்டக்கச்சி,ஒக்.11

கிளிநொச்சி இரணைமடு, சாந்தபுரம் கிராமப் பகுதியில் திடீரென வீசிய மினிபுயற்காற்றினால் பலத்த சேதமேற்பட்டுள்ளது. கடந்த 4ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் வீசிய இந்த மினிசூறாவளியால் 150 இற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. பயன்தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளன. ஓலைக்குடிசைகள் முழுமையாகப் பாறி வீழ்ந்துள்ளன. கூரைத்தகடுகள் வீட்டிலிருந்து நீண்டதூரம் தூக்கி வீசப்பட்டுள்ளன.

சாந்தபுரம் கிராமத்தின் முதலாம் வீதியில் இருந்து எட்டாம் வீதி வரையான பகுதிகளே இவ்வாறு கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

சுழல்காற்று அடித்தபோது பிரதேச மக்களும், மாணவர்களும் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்விற்காகக் கூடியிருந்தமையால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

வாழைத்தோட்டங்கள் பலமுழுமையாக அழிவடைந்துள்ளன.

இதனால், வீடுகளை இழந்த குடும்பங்கள் தமது உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இந்த அழிவுகள் ஏற்பட்ட பகுதிகளை கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜினி நேரில் சென்றுபார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமைத்த உணவும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வுக்கழக அங்கத்தவர்களும், பணியாளர்களும் சம்பவ இடத்திற்குச் சென்று பாதிப்படைந்த மக்களைப் பார்வையிட்டதுடன், அவர்களுக்கான நிவாரணம் வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் உணவுப் பொருள்களும் வீட்டுக் கூரைக்கான தறப்பாளும் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகளில் கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் த.க.கண்ணன், நிறுவன இணைப்பாளர் திருமதி சிறிரஞ்சினி மற்றும் நிறுவனப் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

சம்பவம் நடைபெற்ற உடனேயே கிராம சேவையாளர் நவரட்ணம், ஊரக வளர்ச்சிக் குழுவினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர்சங்கத்தினர், கமக்காரர் அமைப்புகள் ஆகியோர் இணைந்து பாதிப்புற்ற வீடுகளைப் பார்வையிட்டதுடன் பாதிப்புக்கள் பற்றிய பதிவுகளையும் மேற்கொண்டிருந்தனர். இவர்களுடன் மனிதவள உத்தியோகத்தர் சி.இராசலிங்கமும் இணைந்து செயற்பட்டார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கந்தம்மான், தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் உட்படப் பலரும் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

(9-405)





## கல்விக் கண்காட்சி

வட்டக்கச்சி,ஒக்.11

கிளிநொச்சி, கல்மடுநகர் அ.த.க. பாடசாலையின் கல்விக் கண்காட்சி கடந்த 4ஆம் திகதி சிறப்புற நடைபெற்றது. பாடசாலை அதிபர் சு.இரவீந்திரன் தலைமையில் முற்பகல் 11மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது.

தரம் 1 கண்காட்சி மண்டபத்தை உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கமும் தரம் 2 கண்காட்சி மண்டபத்தை ஆசிரிய ஆலோசகர் திருமதி சந்திரசேகரமும் தரம் 3 கண்காட்சி மண்டபத்தைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆ.நவரத்தினமும் தரம் 4 கண்காட்சி மண்டபத்தைச் சம்புக்குளம் கிராம அபிவிருத்தி சங்கச் செயலாளர் ச.சதாசிவமும் தரம் 5 கண்காட்சி மண்டபத்தைத் தர்மபுரம் ம.வி. ஆசிரியர் க.ரவீந்திரராசாவும் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தனர். தொடர்ந்து கண்காட்சி இடம்பெற்றது. மாணவர்களது தனித்தனியான ஆக்கங்களும் குழு ஆக்கங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியினைப் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் அயற் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பெருந் தொகையானோர் பார்வையிட்டனர்.

(த-405)

## கரைச்சிப் பிரதேச வீதிகளில் திண்மக் கழிவகற்றும் பணி

வட்டக்கச்சி,ஒக்.11

சர்வதேச சூழல் தினமான ஒக்ரோபர் 7ஆம் திகதியன்று கரைச்சிப் பிரதேச சபையுடன் இணைந்து சூழல் நல்லாட்சி ஆணையகம் வீதியோரங்களில் உள்ள திண்மக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்நடவடிக்கையில் அனைத்து அரச, அரசசார்பற்ற, இயக்க நிறுவனங்களின் பணியாளர்கள் இணைந்து ஈடுபட்டனர்.

ஏ-9 பிரதான சாலையில் முறிகண்டிச் சந்தியிலிருந்து பரந்தன் சந்தி வரையான பகுதியிலேயே துப்புரவுப் பணி இடம்பெற்றது.

இதைவிட உள்வீதிகள், கிராமங்களிலும் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. டோசர் போன்ற இயந்திரங்களைக் கொண்டும் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

(9-405)

## நினைவுதினம் அனுஷ்டிப்பு

ஒட்டுசுட்டான்,ஒக்.11

இலங்கை - இந்திய அரசுகளின் கூட்டுச் சதியால் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் புளியங்குளம் ஆயப்பகுதி மற்றும் புளியங்குளம் இடதுகரை, முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் இடம்பெற்றன. (த-341-202)

## சமளங்குளம் பாடசாலை யானையால் சேதம்!

ஒட்டுசுட்டான்,ஒக்.11

சமளங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தொடர்ந்தும் யானைகளால் சேதமாக்கப்பட்டுவருகின்றது.

மேற்படி பாடசாலை கடந்த மாதங்களில் யானைகளின் அட்டகாசத்தால் சேதமாக்கப்பட்டது. அதிபர் அலுவலகம், தளபாடங்கள் என்பன பெரிதும் சேதமடைந்தன.

இந்த நிலையில் காட்டுயானைகள் மீண்டும் பாடசாலையில் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளன. இதனால், இப்பாடசாலைக்கென இருந்த ஒரேயொரு வகுப்பறைக் கட்டடமும் சேதமடைந்துள்ளது. இதனால், மாணவர்கள் கற்றலில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதுவிடயத்தில் கவனமெடுத்துச் செயற்படவேண்டுமென பாடசாலைச் சமூகம் வேண்டுகோள் விடுக்கின்றது. (த-341-202)

## துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஒக்.11

கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (றீடோ) 'ஐ.எல்.ஓ' நிறுவனத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்திவரும் தொழிற்பயிற்சியில் ஈடுபட்டுவரும் பயிற்சியாளர்களில் 22 பேருக்குத் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் துவிச்சக்கரவண்டிகளை வழங்கும் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி மாலை 4 மணிக்கு 'றீடோ' நிறுவனத் தலைமைப் பணிமனையில் நடைபெற்றது.

'ஐ.எல்.ஓ.' நிறுவனத்தைச் சேர்ந்த ஜோசப், றீடோ நிறுவனத் திட்ட இணைப்பாளர் பிரகாஷ் ஆகியோர் துவிச்சக்கரவண்டிகளை வழங்கினர்.

(த-405)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 அன்று நடைபெற்ற 24 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி பட்டம் பெற்ற

திருமதி தாரணி நிஜினோல்ராஜ்
B.B.A. (Hons) (F.M.Spe.)

அவர்களைப் பாராட்டி, மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (41198)(32-19-34-42)

ராஜ் குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Dr. க.ஸ்ரீதரன்
(B.S.M.S. M.Phil. J.P.)



Dr. பொ.இராமநாதன்
(DAMS MD,Ph.D)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் 07.10.2005 M.Phil பட்டம் பெற்ற Dr.க.ஸ்ரீதரன், Ph.D பட்டம் பெற்ற Dr. பொ.இராமநாதன் மற்றும் BSMS பட்டம் பெற்ற பட்டமாணிகள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(41188)(42-19-34) பி.எஸ்.எம்.எஸ்.தனியார் வைத்தியர்கள் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபரும் எமது கோட்ட அதிபர் சங்க உறுப்பினருமான

திரு.கே.வி.குணசேகரம்

நல்லூர் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி எதிர்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

கோப்பாய்.

அதிபர் சங்கம்,
கோப்பாய்க் கோட்டம்.

**அமைதியான சூழலில்**

ஆசிரியர் திரு.மு.வே.அன்பழகன் அவர்களின் தரம் 5 புலமைப் பரிசில் 2006 வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

காலம்: 12.10.2005 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு

இடம்: அன்பொளி கல்வியகம்
நீராவியடிப் பிள்ளையார் கோயில் பின் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:
பதிவுகளை முற்கூட்டியே இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4 - 6 மணிவரை மேற்கொள்ளவும்.

- இயக்குநர்.

(41196)(42-19-34)

## கண்ணீர் அஞ்சலி

எமது வட மாகாண காரியாலயத்தில் பணிபுரியும் சிரேஷ்ட படவரைஞர் திரு.க.ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தசாமி**

அவர்கள் 08.10.2005 இல் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை,
21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41215)(38-19-34-42)

பணிப்பாளரும் சகஅலுவலர்களும்.

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

10-10-2005 - 15-10-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம் ★ நடுக்கம்
★ நித்திரைக் குறைவு ★ ஆண்மைக் குறைவு ★ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205, T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).

(மி-45517) (24.19.34.42)


## சொல்லாடற்களத்தில் மத்தியகல்லூரி வெற்றி

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரியினால் நடத்தப்பட்ட சிநேகபூர்வ சொல்லாடற்களம் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

மனித விழுமியங்களைப் பெரிதும் புலப்படுத்தியது மகாபாரதமா? கம்பராமாயணமா? என்ற பொருளில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது

இப்போட்டிக்கு நடுவராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.வேல்நம்பி கடமை யாற்றினார். (த-9)

## என்.டி.ஈ. பயின்ற மாணவர் கவனத்துக்கு!

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் என்.டி.ஈ பயின்று இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த சகல மாணவர்களையும் உடனடியாகத் தமது விவரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்களுக்கு ஆங்கில ஆசிரிய நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் - அதற்காகவே விவரங்கள் தேவைப்படுவதாகவும் நிறுவன ஆங்கிலத் துறை பகுதித் தலைவர் வே.கருணாநிதி அறிவித்துள்ளார். (எ-202)

## இயன்மார்டின் ஹக்கீமுடன் சந்திப்பு

இலங்கை வந்துள்ள சர்வதேச மனித உரிமைகள் நிபுணரும், இலங்கை சமாதான முன்னெடுப்புக்களுக்கான ஆலோசகருமான இயன்மார்டின், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமைக் கடந்த சனிக்கிழமை பிற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இப்பேச்சுகளின் போது - வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து புலிகளும் ஸ்ரீ.மு.காவும் நேரடியாகப் பேச்சுகளில் ஈடுபடமுடிந்தால் இப்பிரச்சினை களுக்குத் தீர்வைக் காண்பது இலகுவானது. தற்போதைய நடைமுறைகளின்படி புலிகளுடனான தொடர்புகள் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்து கிளிநொச்சி செல்லும் போது அக்கறை காட்ட வேண்டும் - இயன்மார்டினிடம் கேட்டுக்கொண்டதாக அறியவந்தது. (த-9)

## ஆணையாளருக்கு வரவேற்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

நல்லூர் சங்கிலியன் மன்றத்தினால் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் சீ.வி. கே.சிவஞானத்திற்கு சங்கிலியன் மன்ற மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை வரவேற்பு விழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம், சட்டத்தரணி க.இராஜரத்தினம், கிராம அலுவலர்களான இ.சந்திரகுமார், க.லட்சுமிகாந்தன், வை.சந்திரசேகரம், ஆசிரியை செல்வி.ந. தயாளினி ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

நிகழ்வுக்கு தலைமை வகித்த க.புலேந்திரன் ஆணையாளருக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டார்கள். (த-86)

## விபத்தில் மூவர் படுகாயம்

உரும்பிராய் சந்திப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்தவர்களான எம்.ஜோன் றெஜிஸ் (வயது 18), தர்மலிங்கம் டிலோஜன் (வயது 15), சின்னப்பு செல்வராஜா (வயது 55) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-12-ரி)


## தேவை

முன் அனுபவமுள்ள
1. தேநீர் தயாரிப்பவர்
2. சமையல் உதவியாளர்
3. உணவு பரிமாறுபவர்

உடன் தேவைப்படுகின்றனர். தகுதியுடையோர் நேரில் சமுகம்தரவும் - தகுதி, திறமைக்கு ஏற்ற வகையில் ஊதியம் வழங்கப்படும்.

நிர்வாகி,
பாம் பீச் றெஸ்ரோறன்ற்,
10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(விவேகானந்தா அச்சகம் முன்பாக)

(41200)(32.19.34.42)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/குடத்தனை அ.த.க.பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை

செல்வி கந்தையா இராஜேஸ்வரி

அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சிறந்த ஆசிரியருக்கான பாராட்டினையும் பதக்கத்தினையும் பெற்றமைக்காகப் பாடசாலை பெருமிதமடைந்து பாராட்டுகின்றது. மேலும் கல்விப் புலத்திற்குப் பல சேவைகளாற்ற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், (42-19-34)
(41181) பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 06.10.2005இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.A. கலைமாணி (சிறப்பு)ப் பட்டம் பெற்ற

செல்வி விசுவநாதன் விமலாம்பிகை

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று, வளமுடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (41190)(42-19-34)

சி.வை.சபாரத்தினம்
(பெரியப்பா)
குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



07.10.2005 வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற

திருமதி
சர்மிளா விஜயரூபன்
(இரசாயனவியல் விசேட துறை முதலாம் தரத்தில் சித்தி)

அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.
(41194)(32-19-34-42)

தர்மராஜா
குடும்பம்.

எதிர்வரும் விஜயதசமி முதல் யாழ் ரெக் இல் கீழ்வரும் கற்கைநெறிகளைக் கற்றிட செலுத்தவேண்டியது ரூபா. 1500/- மட்டுமே!

முதலில் வரும் 100 பேர்களுக்கு அனுமதிக்கட்டணமும் இல்லை!!

MS. Office XP | Typesetting | Multimedia
Photo Mixing | Video Mixing | Web Design
Computerized Accounting
Hardware Engineering

விஜயதசமி அன்று அனைத்து கற்கைகளுக்குமான முதல் பிரிவு ஆரம்பிக்கப்படும்

YTS

யாழ் ரெக்
இல.5, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி



## 21ஆம் நாள் நினைவஞ்சலி

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22 | 20 |
| 10 | 09 |
| 1920 | 2005 |

**அமரர் அ.இ.பெஞ்சமின்**

[இலங்கை மின்சார சபை முன்னாள் ஊழியர், இ.மி.ச.தொழிலாளர் சங்க முன்னாள் தலைவர்]

எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விண்ணுலகம் சென்ற இவரின் ஆத்ம சாந்திக்காக நீர்வேலி தெற்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு இவரின் ஆத்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

41, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (41181)(42.19.34)

இவரின் பிரிவில் துயருறும்:
உற்றார், உறவினர்.

# யாழ்.உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஜேர்மன் நிபுணரின் பயிற்சி முகாம்

## 4 நாள்கள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்டத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

ஜேர்மனியில் இருந்து வருகை தரும் உதைபந்தாட்டப் பயிற்றுநர்கள் இந்த முகாமில் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவர்.

இப்பயிற்சி முகாமில் தமது மாணவர்களையும் இணைத்துக் கொள்ளவிரும்பும் பாடசாலை அதிபர்கள், ஒரு பாடசாலையில் இருந்து இளம் பயிற்றுவிப்பாளர் ஒருவரையும் ஐந்து வீரர்களையும் அனுப்பிவைக்க முடியும் எனவும் - பயிற்சி முகாமுக்கு அனுப்பிவைக்கவுள்ள வீரர்களின் பெயர், பிறந்த திகதி, சொந்த முகவரி ஆகிய விவரங்களை ''செயலாளர், யாழ்.உதைபந்தாட்ட லீக், இல.20, புங்கன் குளம் வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு நாளைக்குள் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் - யாழ்.உதைபந்தாட்ட லீக் செயலாளர் தெரிவித்துள்ளார். (3-190-203)

## ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட மட்டத்தில் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று நாளை புதன்கிழமைக்குள் விண்ணப்பங்களைக் கையளிக்க வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(3-203)



முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு, மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள முல்லைத்தீவு மகாவித்தியாலய அணியினரையும் பாடசாலை அதிபர் செ. அல்பிறட் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

(படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்).

## மாதகலில் மென்பந்தாட்டம் சுழிபுரம் விவேகானந்தா வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.11

மாதகல் சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சுழிபுரம் விவேகானந்தா விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வாரம் மாதகல் சென்.யோசப் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை மாலிகாவத்தை விளையாட்டுக் கழகம் 11.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக சிறீகரன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுழிபுரம் விவேகானந்தா அணியைச் சேர்ந்த கு.பாலச்சந்தர் 3 விக்கெட்டுக்களையும் ஐங்கரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 66 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விவேகானந்தா அணி 11 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவ்வணி சார்பாக கு.பாலச்சந்தர் 25 ஓட்டங்களையும் சுதர்சன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (3-410)

## முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆசிரியரிடையே போட்டிகள்

புதுக்குடியிருப்பு,ஒக்.11

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட முல்லைத்தீவு வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் மாலதி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் ஆரம்பமான விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 400மீற்றர், 800மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளும் நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல், முப்பாய்ச்சல் ஆகிய போட்டிகளும் நடைபெற்றன.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை வருடம் தோறும் இத்தகைய போட்டிகளை நடத்தி வருவது தெரிந்ததே.

வழமையைவிட இந்த வருடம் நடந்த போட்டிகளில் பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

(எ-353-405)

## கரைதுறைப்பற்று அணி சம்பியன்

புதுக்குடியிருப்பு,ஒக்.11

புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கரைதுறைப்பற்று அணி சம்பியனானது.

வற்றாப்பளை மங்கேளஸ்வரா விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 4:5 என்ற கோல் கணக் கில் இந்த அணி வெற்றிபெற்றது.

கடந்த மாதம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணியே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (எ-353)

விளையாட்டு

## தாச்சிப்போட்டி முடிவுகள்

கோப்பாய்,ஒக்.11

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த யாழ். வலய பாடசாலைகளுக்கிடையிலான 13 வயது ஆண், பெண் பிரிவினர்களுக்கான தாச்சி போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

*ஆண்கள் பிரிவு*

அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

*பெண்கள் பிரிவு*

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

(எ-72)

## சென்.ஜோன்ஸ் - மகாஜனா இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம்,ஒக்.11

சென்.ஜோன்ஸ் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றின் 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(3-190)

உள்ளூராட்சி வார கிரிக்கெட்

## கிளிநொச்சி கல்வித்திணைக்கள அணி 7 விக்கெட்டுக்களால் வென்று சம்பியன்

வட்டக்கச்சி,ஒக்.11

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

பத்திற்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணியும், வீதி அபிவிருத்தித் திணைக்கள அணியும் தெரிவாகியிருந்தன.

இந்த இரண்டு அணிகளுக்குமிடையே நடைபெற்ற 15 ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வீதி அபிவிருத்தித் திணைக்கள அணி 11 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அடுத்து களம் இறங்கிய கிளிநொச்சி கல்வித்திணைக்கள அணி 9.2 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

போட்டியில் வெற்றிபெற்ற வீரர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இச்சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக தமிழர் புனர்வாழ்வுக் கழக அணியைச் சேர்ந்த உமாகாந்தனும், சிறந்த பந்துவீச்சாளராக கல்வித்திணைக்கள அணியைச் சேர்ந்த கருண்ராஜ்ஜூம், இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகனாகக் கல்வித் திணைக்கள அணியைச் சேர்ந்த ஸ்ரீரமணனும் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (3-405-203)




கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணித்தலைவரிடம் அரச அதிபர் தி.இராசநாயகம் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் - வெற்றி பெற்ற அணியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருட சந்தா ரூ300 மட்டுமே
தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272
நெருக்கடிக்கு உட்படும் பிரதேசங்களில் ஆசிரியர் வகிபங்கு...
வாசியுங்கள் அகவிழி

## பதவி வெற்றிடம்

MAK COST CUTTER ELECTRICAL நிறுவனத்திற்கு எலக்ரிக்கல், பிளமிங் சேவைப்பகுதியில் பயிலுநராகக் கடமைபுரிய ஆள்கள் தேவை.

ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்
வயது எல்லை : 18-30
வீட்டு மின் இணைப்பு (Wiring)
நீர் இணைப்பு (Plumbing)
ஆகியவற்றில் அடிப்படை அறிவு தேவை.
முன் அனுபவ அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்.

தகைமை உள்ளவர்கள் London English College 105,அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 12-10-2005 அன்று பிற்பகல் 4 மணிக்கு நேரில் சமுகம் அளிக்கவும்.

(சி/45549)(46-11-34) - ஆளணிமுகாமையாளர்.



## NORTH LANKA
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

O/L தகமையுடன் 2 வருடங்களில்
**Trinity University** USA
இனது பட்டதாரியாகுங்கள்.

**B.Sc.** (Computer Science)
**B.Sc.** (Mechanical Engineering)

விஜய தசமி அன்று(12-10-05)2வது பிரிவு ஆரம்பம்
பிரதான வீதி சங்கானை ☎ 0214591647



## பாராட்டி வாழ்த்துகின்றோம்


அ.அனீதன் B.A.


ப.தீலிபன் B.A. (Hons)


இ.ஜெகதீபன் B.FA


அ.வசீகரன் B.BA (Hons)

யாழ்.பல்கலைக்கழக 24ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்ணா சிலையடி, கரணவாய்.

நண்பர்கள்:
தயா, கிருபா, பாரதி, சுவே, யோகேஸ், சுதர், சுதன், சுபேஸ், சிவா, துஸ், நிமல்

(41230)(21.11.34)



## பதவி வெற்றிடங்கள்

சேவை விஸ்தரிக்கும் நோக்கில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. Trained Nurses
2. மருந்தகத்தில் வேலை செய்த அனுபவமுள்ளவர்கள்
3. Trainee Nurses/Medical Assistants

குறிப்பு: தேவையேற்படின் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
ஆர்வமுடையவர்கள் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
காலம்: 12.10.2005 நண்பகல் 12 மணி
இடம்: சுகர்னி மருத்துவ நிலையம், 574, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 8222

(41223) (21.11.34)


# வாணி விழாக்கள்

வலி.தெற்கு,ஒக்.11

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டு வரும் உடுவில் கிழக்கு, உடுவில் மேற்கு முன்பள்ளிகளின் வாணிவிழா நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

உடுவில் கிழக்கு முன்பள்ளி மண்டபத்தில் நிலையத் தலைவர் தியாகச்சந்திரன் தலைமையில் விழா நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று மாணவர்களுக்கிடையே சமய அறிவுப்போட்டிகளும் இடம்பெறும். (3-152)

* * *

புங்குடுதீவு,ஒக்.11

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் வாணி விழா நாளை முற்பகல்10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளைப்பாறிய அதிபர் சி.இரத்தினசபாபதி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-ரி-204)

* * *

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வாணி விழா இன்று முற்பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-ரி-204)

* * *

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய வாணி விழா இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஆசிரியமணி ந.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஜே.பி) சோ.தில்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு நிகழ்வாக மாணவர்கள் வழங்கும் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' என்னும் சிந்துநடைக் கூத்தும் இடம்பெறும்.

மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஏடு தொடக்குதல் நிகழ்வு நடைபெறும். (3-ரி-204)

* * *

புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியால வாணி விழா நாளை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.கலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மாணவர் களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (3-ரி-204)

* * *

தென்மராட்சி,ஒக்.11

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் வாணி விழா நாளை முற்பகல் 10 மணிக்கு நகரசபை பொது நூலக மண்டபத்தில் சங்கத்தலைவர் திருமதி குண மணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (3-117)

* * *

தென்மராட்சிப் பிரதேச செயலக நலன்புரிக் கழகத்தின் வாணி விழா நாளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும். (3-117)

* * *

கைதடி மத்தி வள்ளி சனசமூக நிலையத்தின் விஜயதசமி விழா நாளை இரவு 7 மணிக்கு நிலையத் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் நிலைய மண்டபத்திலே நடைபெற இருக்கின்றது. பூசை நிகழ்வுகளுடன் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-75)

* * *

புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்படும் வாணிவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்து மன்றத் தலைவர் சு.ரகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான ''சிறுவைக் கிழார்'' சைவப் புலவர் இ.செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்து கலாசார அமைச்சு உத்தியோகத்தர் சி.மகிந்தினியின் சிறப்புச் சொற்பொழிவு, மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


செல்வி வாசுகி பஞ்சாட்சரம் M.Ed.
(ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை)


செல்வன் சிவப்பிரகாசம் அரிஹரன் B.Sc.


செல்வி சுஜிதா பத்மநாதன் B.Com.


திருமதி பாஸ்கரன் சுபத்திரா B.A


செல்வன் நித்தியானந்தன் கஜேந்திரன் B.F.A

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாள்களில் யாழ்ப்பாணப் பல்கலை கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இவர்களது கல்விச் சிறப்பைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய். (41187) (39-21-11-34) உறவினர்கள்.



**LUXURY HOUSE WITH ALL MODERN FACILITIES AVILABLE FOR RENT N.G.Os ONLY**

An upstairs' house situated at 44/20,Sangiliyan road, Nallur. adjacent to the Nallur Kandasamy temple in 14 lachams of land with all modern facilities including garage is available for rent.

*Please contact telephone numbers:*
021 222 9055,
0773 - 054974,
0779-179919. (40912)(46)



இணுவில் இந்து விளையாட்டுக் கழகம்
லக்கி வீடியோ கோர்ப்பிரேசனின் அனுசரணையுடன் நடத்தும்

## மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி 2005

(7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள்)

விண்ணப்பப் படிவங்கள் பெறும் இடம்:-
பெஷன் ஹவுஸ் - K.K.S வீதி, யாழ்ப்பாணம்
விதுசன் அழகுமாடம் - K.K.S வீதி, சுன்னாகம்.
லக்சுமி உணவகம் - K.K.S வீதி, இணுவில்

பதிவுக்கட்டணம் - 100 ரூபா.
விண்ணப்பமுடிவு திகதி: 18-10-2005

தொலைபேசி இல.
021-2225354,
021-4590878,
0777-222554

இந்து விளையாட்டுக் கழகம், இணுவில்.

(41224)(46-11-34)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பிற பாடசாலைகளில் உயர்கல்வியைப் பெற்று 2004 ஆம் ஆண்டு க.பொ.த.(உ/த)ப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பல்கலைக்கழகப் பீடங்களுக்குத் தெரிவாகும் தகுதியுடைய மாணவர்கள் அனைவரையும் 23.10.2005 இல் நடைபெறும் ''மாணவர்தின'' நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கலந்து விழா நிறைவில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கம், ப.மா.சங்கம்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை. (சி-45547)



யாழ்.பல்கலைக்கழகத்தில்
06.10.2005, 07.10.2005 அன்று பட்டம் பெற்ற மாணவர்களே!

அன்றைய தினம் அரங்கில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட VEDIO மற்றும் புகைப்படப் பிரதிகளைப் பெறவிரும்புபவர்கள் விபரங்களை உடன் பதிவு செய்யவும்.

காலம் :- 11.10.2005 - 18.10.2005
நேரம் :- காலை 9.00 - 12.00, பிற்பகல் 1.00 - 4.00

தொலைபேசித் தொடர்புகளுக்கு :-
பொன்கவீன் VEDIO லக்ஷிமி நாதம் ,
புகைப்படக்கலையகம்.
S.மதன் :- 0777 288887, 0776544158
நேரில் :- இல.90, சட்டநாதர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(41217)(32-21-11-34)



## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 08 - 08 - 1971



மறைவு 28 - 08 - 2005

### அமரர் பூபாலசிங்கம் நகுலேஸ்வரன்
(மகிழ்ராசா -நகுலேஸ்)

நாள்கள் ஓடி மறைந்தாலும்
மாறவில்லை எங்கள் மனம்
ஒளியின்றித் தவிக்கின்றோம்
ஒளிதர வாராயோ?

இன்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

82/86, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (41212)(18)

பூபாலசிங்கம் (மகிழ்ராசா) குடும்பத்தினர்.

# கௌதமாலாவில் நிலச்சரிவு: கிராமமே புதைந்துபோனது!

## ஆயிரத்து 400 பேர் பலி!!

பனபாஜ், ஒக்.11

தென்அமெரிக்காவில் உள்ள கௌதமாலாவில் அண்மையில் ஏற்பட்ட 'ஸ்டான்' என்ற சூறாவளியின் எதிரொலியாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒரு கிராமமே மண்ணில் புதைந்து போயுள்ளது. இதில் ஆயிரத்து 400 பேர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்பட்டுள்ளது.

'ஸ்டான்' சூறாவளி தாக்குதலால் கௌதமாலாவில் பல நாள் [illegible] ளாகத் தொடர்ந்து பலத்த [illegible] ழைபெய்[illegible] ருகிறது. அதைத் தெ[illegible] மலைய[illegible] ரத்தில் அமைந்தி ரு[illegible] பாஜ் என்[illegible] மம் அருகே மண் சரி[illegible] பட்டது. [illegible] ராமத்தையே இடி பா[illegible] ழடிவி[illegible] தால் அக்கிராமத்தில் இருந்த மக்கள் அனைவரும் மண்ணுக்கு அடியில் புதையுண்டு போயிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதில் 1, 400 பேர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

''இச்சம்பவத்தில் யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை. அனைவரும் உயிரிழந்திருக்கலாம். இதுவரை 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இறந்துபோனவர்கள் யார்? யார்? என்பது பற்றிய தகவல்களைத் திரட்டிவருகிறோம்''- என மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏராளமானோர் மண்ணில் புதைந்துபோனதால் மீட்புப்பணிகளை நிறுத்திவிட்டு ஒட்டுமொத்தமாகக் கிராமத்தையே 'சவக்கிடங்காக' அமைப்பது பற்றி ஆலோசனை நடத்திவருகின்றனர்.

கௌதமாலா நிலநடுக்கம், எரிமலை, சூறாவளி போன்ற இயற்கையின் தாக்கங்களுக்கு அடிக்கடி உட்படுவது குறிப்பிடத்தக்கது.



கௌதமாலாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய சிறுமி ஒருவரைப் மீட்புப் பணியாளர் ஒருவர் பத்திரமாக மீட்டு வருகிறார்.

உலக அரங்கில்

## இந்தியப் பழங்குடியினர் மோதலில் 8 பேர் பலி!

திபு,ஒக்.11

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இரு பழங்குடியினத்தவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் 8பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அசாமின் ஆங்லாங் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது. இப்பகுதிகளில் திமாசா மற்றும் கர்பிஸ் பழங்குடியின மக்களுக்கிடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது.

திமாசா இனத்தைச் சேர்ந்த பழங்குடியின இளைஞர்கள் ராணுவ உடையணிந்து நவீன ஆயுதங்களுடன் கர்பிஸ் மக்கள் வசிக்கும் 12 கிராமங்களில் புகுந்து தாக்குதல் நடத்தினர். கர்பிஸ் இனத்தை சேர்ந்த 8 பேரை அவர்கள் வெட்டிக்கொன்றனர். மேலும் அப்பகுதிகளில் உள்ள 150 வீடுகளைத் தீக்கிரையாக்கினர். வீடுகளை இழந்த 300 பேர் அருகிலுள்ள ரயில் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர்.

(க)

## பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சர்வதேச உதவிகள் குவிகின்றன

இஸ்லாமாபாத்,ஒக்.11

பாகிஸ்தானை மையமாகக்கொண்டு கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பாரிய பூகம்பத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கும் அதிகம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 50ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். பல நூறு கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளது.

அதேவேளை, பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. உலக நாடுகளின் உதவிகளும் பாகிஸ்தானில் வந்து குவியத் தொடங்கியுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர், இஸ்லாமாபாத் மற்றும் லாகூர் ஆகிய பகுதிகளில் மட்டும் பூகம்பத்தால் 30,000 பேர் பலியாகிவிட்டனர் என்று பாகிஸ்தான் பொதுப்பணி மற்றும் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் தாரிக் பாருக் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் மற்றும் பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதிகளில், பூகம்பத்தால் தரைமட்டமாகிக் கிடக்கும் கட்டட இடிபாடுகளில் இருந்து இதுவரை 430 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். என இராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் செளகத் சுல்தான் தெரிவித்தார்.

கட்டிஹபிபுல்லா கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடக் கட்டடம் இடிந்து நொறுங்கியதில் 400 குழந்தைகள் சிக்கிக்கொண்டனர். இடிபாடுகளை அகற்றி, அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்துவருகின்றது.

பூகம்பத்தால் பெருமளவு பாதிப்புக்குள்ளான பாகிஸ்தான் மக்களுக்கு உலக நாடுகளின் உதவி குவியத்தொடங்கியுள்ளது. நிவாரணப் பொருள்களும், மீட்புப்பொருள்களும் வரத்தொடங்கியுள்ளன.

இதேவேளை-

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீரில் ஏற்பட்ட பூகம்பத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 600 இற்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பூகம்ப இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடுவோரையும், பிணமானவர்களையும் மீட்கும் பணியில் ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு உணவு நிவாரணப் பொருள்களை எடுத்துச்செல்ல வீதிகளில் விழுந்து கிடக்கும் இடிபாடுகளை அகற்றும் பணியில் கனரக வாகனங்கள் ஈடுபட்டுள்ளன.

## பாகிஸ்தானைத் தாக்கிய பூகம்பம் ஏற்பட்டது எப்படி?

இஸ்லாமாபாத் ,ஒக்.11

இந்தியத் துணைக்கண்டம் அமைந்துள்ள பூமித் தட்டானது, வடக்கு நோக்கி நகர்ந்து, யுரேஷிய பூமித் தட்டின் மீது மோதியதால்தான் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா ஆகிய பகுதிகளில் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. இந்தியத் துணைக்கண்டம் ஆண்டுக்கு 4 சென்றி மீற்றர் என்ற வீதத்தில் வடக்கு நோக்கி நகர்ந்துகொண்டு இருக்கிறது என்று அமெரிக்க ஆய்வு நிறுவனம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் பல்லாயிரக் கணக்கானோரைப் பலிகொண்ட பூகம்பம் எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிய ஆய்வறிக்கையை அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில், அது மேலும் தெரிவித்திருப்பதாவது :-

வடக்கு நோக்கி நகரும் இந்தியத் துணைக்கண்டத் தட்டு, யுரேஷியக் கண்டத் தட்டின் மீது மோதும் போது,யுரேஷியக் கண்டத்துக்கு அடியில் இந்தியத் துணைக்கண்டப் புவித்திட்டு செல்கிறது. அதனால், அதற்கு நேராகவுள்ள பூமியின் மேல்பகுதி உயர்ந்து, அடுக்குகள் ஏற்படுகின்றன.

அதனால்,உலகின் மிக உயர்ந்த சிகரங்கள் இமயமலையில் உருவாகுகின்றன. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இவ்வாறு நிகழ்ந்துவந்ததால்தான் இமயமலை, காரகோரம் மலைத்தொடர், பாமீர் முடிச்சுப் பகுதி, தந்துகுஷ் மலைத்தொடர் ஆகியன உருவாகின. இந்த இரு பூமித் தட்டுகளும் மோதிக்கொள்ளுவதால் ஏற்படும் அழுத்த விசையானது,மலையடிவாரப் பகுதியில் உள்ள பூமித் தட்டின் மேற்பகுதியைப் பாதிக்கிறது.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தின் மையப்புள்ளி, பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீரின் தலைநகரான முஸாபராபாதிலிருந்து தென்மேற்கே 10 கி.மீ. தூரத்தில் அமைந்திருந்தது. அப்பகுதி அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியாகும். நிலநடுக்கத்தால் ஏற்படும் அழுத்தத்தால், அங்கு வளைவு வடிவப் பாறைகள் உருவாகியுள்ளன என்று அமெரிக்க ஆய்வு அமைப்புத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின் காஷ்மீரில் சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தின் மையப்புள்ளி,பூமியின் மேற்பரப்புக்கு அருகிலேயே, அதாவது சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்திலேயே அமைந்து இருந்ததால்தான், அந்த பூகம்பத்தால் அதிகப்படியான பொருள் சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டுவிட்டது என்று ஜப்பானியப் பூகம்ப ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பூமிக்குள் மிக ஆழத்தில் ஏற்படக்கூடிய பூகம்பங்களைவிட, மேற்பரப்புக்கு அருகிலேயே ஏற்படும் பூகம்பங்களால் விளையும் சேதம் அதிகமாக இருக்கும் என்று ஜப்பானிய ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த பூகம்பவியல் நிபுணர் யாசுவோ செகிடா கூறினார்.

## பாகிஸ்தான் பூகம்பத்தில் பின்லேடன் மரணமா?

வாஷிங்ரன்,ஒக்.11

சர்வதேசத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் இடம் பெற்ற பூகம்பத்தில் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒஸாமா பின்லேடனை அமெரிக்கா பல வருடங்களாகத் தேடிவருகின்றது. பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியையொட்டி பின்லேடன் இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியபோதும் அமெரிக்கப் படையினரால் அவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இதனிடையே கடந்த சனிக்கிழமை பாகிஸ்தானைப் பூகம்பம் தாக்கியது. இதில் பின்லேடன் தலைமறைவாகி இருப்பதாகக் கருதப்படும் எல்லைப்பகுதியும் பலத்தசேதத்திற்கு உள்ளாகியது. இதில் பின்லேடன் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீட்புப்பணிகள் இடம்பெறும்பகுதிகளில் அமெரிக்க அதிகாரிகள் இரகசியமான முறையில் பின்லேடன் பற்றிய தகவல்களைப்பெற தீவிரமாக கண்காணித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

## சூடானில் அமைதிப் படையினர் 18 பேர் ஆயுததாரிகளால் கடத்தல்

தர்பூர், ஒக். 11

சூடானில் அமைதிப்பணியில் ஈடுபட்டுள்ள ஆபிரிக்க ஒன்றியத்[illegible]ச்சேர்ந்த அமைதிப் படையினர் 18 பேர் [illegible] ய ஆயுதக் குழு ஒன்றினால் க[illegible]த்திச்செல்லப்பட்டனர். அவர்களில் சிலர் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என ஆபிரிக்க ஒன்றிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தர்பூரின் பதற்றமிக்க பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சூடானில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் என்ற அமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களே இக்கடத்தல் சம்பவங்களின் சூத்திரதாரிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் இராணுவ அவதானிப்பாளர்கள், சிவில் பொலீஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள், அமெரிக்கத் தூதுவர் ஒருவர், போராளிகளின் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒரு பகுதியினர் சூடான் - சாட் எல்லைப் பகுதியில் உள்ள தீனார் என்ற இடத்தில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனியன்று ஆபிரிக்க ஒன்றியத்தின் அமைதிப்படையினர் மீது பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். இதில் 2 பேர் ஆபிரிக்க ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள். இச்சம்பவம் குறித்து ஆபிரிக்க ஒன்றிய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஆபிரிக்க ஒன்றியத்தின் சமாதானப் படையினரை போராளிகள் எனக் கருதித் தாக்கி வருகின்றனர். இது எம்மை அச்சமடைய வைத்துள்ளது.''

சூடானில் தொடரும் மோதல்களில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 20 லட்சம் பேர் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## ஈபிள் கோபுரத்தில் திடீர் குண்டுப் புரளி

பிரான்ஸில் உள்ள ஈபிள் கோபுரத்தை குண்டுவைத்துத் தகர்க்கப் போவதாகக் கிடைத்த அநாமதேயத் தகவலையடுத்து அங்கிருந்த உல்லாசப்பயணிகள் மற்றும் தொழிலாளர்கள் உடனடியாக அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

உடனடியாக விரைந்த பாதுகாப்புப் படையினர் அப்பகுதிகளில் தீவிர சோதனை நடத்தினர். இது பொய்யான தகவல் எனத் தெரிய வந்தது. அதன்பின்னர் உல்லாசப்பயணிகளும், ஏனையோரும் மீண்டும் அனுமதிக்கப்பட்டனர். உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் 1889ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 10ஆயிரத்து நூறு தொன் எடையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(க)



# 31ம் நாள் நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், கொட்டடி, காலஞ்சென்ற மலா[illegible] பென்சனர் உயர்திரு. கனகசபை ஆறுமுகம் திருமதி சற்குணம் ஆறுமுகம் ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும் யாழ்ப்பாணம் காரைநகர் பிரசித்த நொத்தாரிசும், சட்ட உதவியாளருமான கந்தையா முருகேசு தர்மராசா அவர்களின் அருமைத்துணைவியாரும் கொழும்பு-06, ஹாமர்ஸ் அவெனியூ, ஹாமர்ஸ் பிளேஸ், இலக்கம் 02ல் வசித்தவருமான



## திருமதி திலகவதி தர்மராசா

### அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி

திருமதி திலகவதி தர்மராசா அவர்கள் 1996ம் ஆண்டில் கனடாவில் எழுதி ஆக்கி கனடா வானொலியிலும் கனடா புதினத் தாள்களிலும் வெளியிட்ட தத்துவங்கள் கட்டுரைகள், கதைகள் மற்றும் சுவிதைகளுட் சிலவும் அன்னாரை நினைவு கூரும் விடயதானங்களுட் சிலவும்

## ஒரு சில தத்துவங்கள்

வாழ்க்கையில் நாம் ஆசைபட்டுத் தேடும் பணம், அதிகாரம், பெருமை எல்லாமே நாம் இறந்துபோன பின் நம்முடன் வரக்கூடியவை அல்ல. ஆனால் இவை எதுவானாலும் அது இறைவனுக்கே அர்ப்பணம் என்று நினைத்து விடும்போது அவை அ ழிவில்லாத் தன்மையைப் பெறுகின்றன.

இரவு நேரத்துக்குத் தேவையானவற்றைப் பகலில் தேடி வைத்துக் கொள்ள வேண்டும். மழைக் காலத்திற்கு வேண்டியதை, அதற்கு முந்திய, மற்றைய காலத்தில் தேடி வைத்துக்கொள்ள வேண்டும்.

முதுமைக்குத் தேவைப்படுவதை இளமையில் தேடி வைத்தக்கொள்வதே அறிவுடமை. அதேபோல் மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்ள வேண்டும்.

பணம் சேரக் சேர சாப்பாடு குறையும், தூக்கமும், ஒழுக்கமும் நிம்மதியும் குறையும் ஏன் பக்தியும் கூடக் குறையும்.

நமது பிரார்த்தனைகள் கடவுளின் தீர்ப்பை மாற்ற இயலாவிட்டாலும், நம்மையே நல்லவனாக மாற்றும் வல்லமை கொண்டவை என்பதில் ஐ யமில்லை.

இறைவனது உதவி தாமதித்துக் கிடைத்தாலும் அது வலுவானது என்பதை உணரவேண்டும்.

**தொலைவிலிருந்து**

ஆசையாய் ஆசை அன்ரி எனன்று எல்லோராலும்
அன்புடன் அழைக்கப்பட்டீர்கள்
இன்று எம்மை மீளாத்துயரில் மூழ்கவிட்டு
நெஞ்சங்களை துடிக்க நிலையாகப் பிரிந்து
துயின்று விட்டீர்கள்

இனி நாம் ஆசை அன்ரி என்று யாரை அழைப்பது?
எல்லார் இதயத்திலும் நேசங்களை வளர்த்துவிட்டு
இன் முகத்துடன் வாழ்வின் எல்லைக்குச் சென்றதேனோ?
உதவியென்றாலும் உபசாரமென்றாலும்
உள்ளம் உவந்து வழங்கும்
எங்கள் ஆசை அன்ரி இனி எங்கே....?

எவர்க்கும் "இல்லை" என்று எதையும் சொல்வதில்லை
இன்று எங்களுடன் நீங்கள் இல்லை
என்று நினைக்க எங்களால் இயலவில்லை
எல்லோர்க்கும் தைரியம் சொல்லிவிட்டு
எம்மையெல்லாம் சோரவிட்டு எங்கே போய்விட்டீர்கள்?

மைல்கள் தொலைவில் இன்று நாம் இருந்தாலுதம்
என்றும் மனதைவிட்டு அகலா உங்கள் நினைவுகள்
பிரிவு இன்று நிரந்தரமாகிவிட்டபோது
நினைவுகள் மட்டும் நெஞ்சை வட்டமிடுகின்றன....

என்றும் உங்கள் பிரிவுத் துயரால் வாடும்
**கவிதா, துவி**
**(திருமதி. கவிதா சிவகரன்),**
**(திருமதி. துவி பிரபாகரன்)**

## நினைவுரைகள்

**பெறாமகனின் கண்ணீர் மடல்**

நம் மெல்லோரையும் ஆறாத் துயரதில்
தவிக் கவிட்டுச் சென்றீரோ திலகவதிச் சித்தியம்மா!
வார ங்களைந்து கழிவதன்முன் நாளன்றோ
தங்கள் குரலைத் தொலைபேசியில் கேட்டோமம்மா.
ஒரு மணிநேரமாய்த் தங்கள்சுகம் விசாரித்ததும்,
மிகுந்த அன்புடனே பாசமாய்ப் பேசியதும்,
நேற் றின்று போலல்லவோ இருக்குதம்மா எங்களம்மா!
அப் போதுங்கூட சாப்பாட்டைப் பக்குவமாய்ப் பத்தியமாய்
என் ணெயுறைப்புத் தவிர்த்து உண்ணவேண்டுமெனத் சொல்லியும்
அதற்குள்ளே காலன் மனம் கேட்கவில்லை சித்தியம்மா!
எம் தன்னையைத் தன்சகோதரிபோல் பார்த்ததுவும்,
எம் தம்பியர் தங்கையை தம்பிள்ளைகளாய் நேசித்ததும்,
எம் மனதில் காலமெல்லாம் ஆழமாய்ப் பதிந்திருக்கும்.
எம் பேரன் கா.க.விஸ்வலிங்கம் எம்மவர்க்குத் தேடித்தந்த
அமையான பொக்கிஷம் பாசமிகுதிலகவதியம்மா
இவ்வளவு சீக்கிரமாய் எம்மைவிட்டுப் போனீரே!
போனார் கா.க.வி.யையும் அதியுயர் பண்புடனே
தன் தந்தைபோல் நேசித்ததும் அவரது முதுமையிலும்
பணிவிடைகள் பலசெய்து அன்புடனே பார்த்ததுவும்
அன்பினிற்கோர் திருவுருவாய் உறவுக்கோர் அணிகலமாய்
எம் மனதில் என்றேன்றும் நிலையாகப் பதிந்திருக்கும்.
எம் மனைவி மக்களுடன் சித்திய[illegible]ாவை நினைந்து நினைந்து
சமுத்திரங்கள் பல கடந்த கனடிய மண்ணில்
எம் கண்ணீர் வரி வரியாய்ச் சொரிகின்றனவோ!
எம் மருமைத் திலகவதி சித்தியம்மா ஆத்மீகச் சாந்திபெற
என்றென்றும் இறையருளை வேண்டி நின்று வழிபடுவோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
**அன்புடன் பெறாமகன்**
**சி.குகநேசபவான்**
**K.K.V. பேரன்**

**சேநசமிகு நெஞ்சே**

கோவையம்பதி வாழ்ந்த குலக்கொழுந்தாய்
தர்மராஜாவின் தர்ம பத்தினியாய்
அயலவர்க்கும் அன்புக் குழந்தைகட்டும்
ஆசை அன்ரியாய் உலா வந்த
தித்திக்கும் பேச்சுடைத் திலகவதியே!
அன்பு மனமும், ஆசை முகமும்,
இனிய பேச்சும், ஈடில்லாக் கருணையும்,
உயரிய பாசமும், ஊரெங்கும் நட்பும் - கொண்டு
எம்மனம் நிறைந்த ஏந்திழையே - உன்
ஒப்பிலாக் கைமணமும்
ஓடி ஓடி உபசரிக்கும் பாங்கும்
அயல் நாடு சென்ற போதும்
அனைவரையும் மனத்திருத்தி
அரும் பரிசுகள் கொண்டு தந்து - உன் ந்
அன்பகலா உள்ளமும் - எம் நெஞ்சை
விட்டகலா நிற்கிறதே - எம்
இனிய தோழி இனிவரும் நாட்கள் - எமக்கு
இருளாய்த் தோன்றிடுதே
நேசமிகு நெஞ்சே - உன்னை
நினைத்தால் மனம் நெகிழ்ந்திடுதே
ஈசனடி சேர்ந்த இனியவளே - உன்
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை அனுதினமும்
வேண்டி நிற்பதன்றி வேறொன்றும் யாமறியோம்
**அம்பிகை தர்மலிங்கம்**
**இளைப்பாறிய ஆசிரியர்**
**யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி**

**தமிழ்ப் பெண்**

எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை!

அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன!

சமையல் செய்தல்
படுக்கை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே -எனது கடமைகள்

கற்பு பற்றியும்
கற்பு உடையவள்
பெய்யெனப் பெய்யும்
மழை பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது
உடலையே நோக்குவர்

கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்!

**காதலித்தேன்**

வெண்ணிலவைக் காதலித்தேன்
விழி நிறையக் கவி பெற்றேன்!

கதிரவனைக் காதலித்தேன்
கடமையினை கற்றுவிட்டேன்!

மேகங்களைக் காதலித்தேன்
தாகங்களை விட்டுவிட்டேன்!

பறவைகளைக் காதலித்தேன்
உறவுகளைக் கற்றுவிட்டேன்!

தென்றலைக் காதலித்தேன்
திசை தோறும் சுகம் பெற்றேன்!

பூக்களைக் காதலித்தேன்
பாக்கள் நூறு கோர்த்துவிட்டேன்!

கருங்குயிலைக் காதலித்தேன்
கானம் பாடக் கற்றுக்கொண்டேன்!

செந்தமிழைக் காதலித்தேன்
சிந்தனையில் வளமை பெற்றேன்!

பெண்ணவளைக் காதலித்தேன்
என்னையே இழந்து விட்டேன்!

**ஆதரவின்றித் தவிக்கின்றோம்!**

ஆசையம்மா! இன்று நீங்கள் எங்களுடன் இல்லை. இதை நினைக்கும் போது ஏன் இந்தச் செய்தி பொய்யாகிவிடக்கூடாது என்று தோன்றுகிறது. எங்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அரவணைக்கும் ஆசையம்மா இல்லை எனும் போது மனம் கனக்கின்றது. நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்த காலங்களிலிருந்து எங்களை விட்டுப் போகும் வரை எங்களுக்கு அளித்த அன்பும் ஆதரவும் சொல்லில் அடங்காதவை. நாங்கள் பல்கலைக்கழக விடுதியில் இருந்த காலத்தி[illegible] யாழ்ப்பாணம் செல்ல முடியாத சூழ்நிலையில் கொழும்பிற்கு வந்தால் உடனே சாப்பிட்டு விட்டுப்போகுயாறு கூறுவீர்கள். அது எந்த நேரமாக இருந்தால் கூட! சாப்பாடு என்றால் அது சாதாரணமானதாக இல்லாமல் விஷேடதானதாகத்தான் இருக்கும். விடுதிச் சாப்பாட்டைப் பற்றி எனக்குத் தெரியும் நன்றாகச் சாப்பிடு என்று கூறுவீர்கள். சொந்த வீட்டிற்குச் செல்லாத குஐறயை பலமுறை எங்களுக்குத் தீர்த்துள்ளீர்கள். ஆனால் இன்று நீங்கள் யாரிடமும் உதவி பெறாது சென்றுவிட்டீர்கள். இறைவன் உங்களுக்கு மேலான ஒரு இடத்தை ஒதுக்கி இருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனது திருமணம் முடிந்து உங்கள் வீட்டிற்கு வரப்போகின்றோம் எ'று தொலைபேசியில் அறிவித்த போது வாங்கள் வாருங்கள் என்று அழைத்தீர்களே ஆசையம்மா! அதுதான் நான் உங்களின் குரலைக் கடைசியாகக் கேட்பது என்று எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லையே! வீட்டிற்கு வந்தபோது வழமையாக வரவேற்கும் ஆசையம்மா அங்கு இருக்கவில்லை. ஆசையப்பா தான் நின்றார். ஆசையம்மாவிற்கு சிறு வைரஸ் காய்ச்சல் உடனடியாக வைத்தியாசலைக்குப் போக வேண்டியிருந்தது. ஆனால் நான் நின்றிருந்தால் எப்படிக் கவனிப்பேனோ அப்படி வருகின்ற பிள்ளைகளையும் கவனிக்கும்படி ஆசையம்மா கூறினார் என்று ஆசையப்பா சொன்னார். தான் இல்லாத இடத்திலும் தனது உபசாரம் கிடைக்க வேண்டுமென்று நினைக்கும் நீங்கள் எங்களை அனாதரவாக விட்டுச் சென்றுவீட்டீர்கள். நீங்கள் எங்களுக்குச் செய்த பண உதவி, பொருள் உதவிகள், அதனிலும் மேலான அன்பும் ஆதரவும் நீங்கள் இல்லை எனும்போது எங்களைத் தடுமாற வைக்கின்ற. மற்றவர்களுக்குக் கொடுக்கும் போது வரும் சந்தோஷமே பெரும் சந்தோஷமாக நினைத்து வாழ்ந்த ஆசையம்மாவை இனி எங்களால் காணமுடியாது. ஆனால் அவர் எங்களில் காட்டிய அன்பும் எங்களுக்குச் செய்த உதவியும் அவரை எங்கள் இதயங்களில் உயர்ந்த இடத்தில் வைத்துள்ளது.

**கிரி, சுகி, ரூபன், பத்மா**
**காலஞ்சென்ற தங்கவேலாயுதம் குடும்பம்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## எம்மருகில் இருந்திடய்யா



தாய் மடி

**14.02.1934**

இறையடி

**17.09.2004**

# அமரர்

# K.V. குலரத்தினம் (J.P.)

(யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவர், யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் உபதலைவர், உரிமையாளர்– லிங்கம் ஸ்ரோஸ் )

காரை மாதா ஈன்றெடுத்த கவின் பெறு நாயகனே!
உத்தமனே! அதி உத்தமனே குலரத்தினமே!
ஊரை நேசித்து ஓடி வரும் காவலனே
ஓயாது தொண்டு செய்யும் உள்ளமது கொண்டவனே
ஆரை இனிக் காண்போம் அயராது தொண்டு செய்ய
எமையெல்லாம் வளர்த்தெடுத்து இவ்வுலகில் நாமுயர்ந்து
நல்லவராய் வாழவைத்து நாளும் எமைப் பார்த்திருந்து
எங்களை வெளிநாடு அனுப்பி பாதுகாத்திருந்த
எம்மினிய ஐயாவே இன்று பாரைவிட்டகன்றாயோ?
பதைக்கின்றார் பந்துசனம். ஆரோக்கியமானவனை
அந்தகன் கைப்பற்றினானோ.
பரமசிவன் பாதமது பற்றினையோ பந்தமற
சபைதனிலே தனித்துவமாய் தலைமையது தாங்கிடுவாய்
அவைதனிலே கையுறுக்கி ஆனமொழி கேட்டிடுவாய்
நியாயமெனக் கண்டிட்டால் நீதிமொழி கூறிடுவாய்
வந்த கடன் முடித்துவிட்டேன் வாழ்வெனக்கு போதுமென்று
வானுலகம் சென்றாயோ எங்கள் நிலை பார்த்தாயா?
எமக்கு இனி யாருதுணை உங்களை நாம் பிரிந்து
உருகி அழ வைத்தாயே எங்கள் குலவிளக்கே!
எமக்கினிய ஐயாவே!!
நிமலனது பாதமது நீ விரும்பிச் சென்றாயோ!

எங்கள் குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு லிங்கம் வாசகத்தில் இன்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

LINGAM VAASAGAM
156, LYON PARK AVENUE,
WEMBLEY, HAO 4 HG
LONDON. Tel: 02087953866

தகவல் :
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
K.K.V. குடும்பத்தினர்.

# தீவக வலயத்துக்கு ஆங்கில உதவிப் பணிப்பாளர்

தீவக கல்வி வலயத்தின் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக க.கதிரேச பிள்ளை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வலிகாமம் கல்வி வலயத்தில் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி வந்தாரென்றும் -

தீவக வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் பிலிப்பையா பெனடிக்ற் கடந்த மாதம் 16ஆம் திகதியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதால் அந்த இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை, இந்தக் கல்வி வலயத்திற்கு சில மாதங்களாக வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த-88)


## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

**01. பணிநிலை:- அலுவலர் (பயிலுநர்)**

தகைமைகள்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தொழில் நிர்வாகமாணி (B.B.A.) / வணிகமாணி (B.Com.) / விஞ்ஞானமாணி (B.Sc.)பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல்வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப்படிப்பை (Diploma in Banking) நிறைவுசெய்தவராக இருத்தல்வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- **4,500 + 6,000**

அகவை எல்லை:- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

**02. பணிநிலை:- கணக்காய்வாளர் (பயிலுநர்)**

தகைமைகள்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா (HNDA) கற்கை நெறியில் / உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) கற்கை நெறியில் குறைந்தது மூன்று (3) ஆண்டுகள் தேர்ச்சியடைந்தவராக இருத்தல்வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- **3,500 + 6,000**

அகவை எல்லை:- 32வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

**03. பணிநிலை:- உத்தியோக உதவியாளர் தரம் - 03**

தகைமைகள்:- க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 5 திறமைச் சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- $\frac{3,670 - 5,070}{70x20} + 6,000$

அகவை எல்லை:- 19 - 25 ஆண்டுகள்

**வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் "*ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - கணக்காய்வாளர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - உத்தியோக உதவியாளர், தரம் 03*" எனக் குறிப்பிடப்பட்டு 31-10-2005ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும் மேற்கூறிய விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:-
- முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
- நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத் தபாலில் (**மனித வள மேலாளர், மனிதவளப் பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், இரத்தினம் மேல் மாடி, யாழ். சாலை, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(அ/45450) (24-21-16-34)


# வாசகர் திருமுகம்

## விலைபோகும் விளையாட்டு ஆற்றல்கள்

விளையாட்டுகளில் எதிரணியின் முக்கிய வீரர்களைப் பணத்தால் விலைக்கு வாங்கி வலுவிழக்கச் செய்து தோற்கடிக்கும் கலாசாரத்தை நாங்கள் வெளிநாடுகளிலிருந்து அவ்வப்போது அறிந்துள்ளோம். அந்தக் கலாசாரம் எம்மவருள்ளும் புகுந்துவிட்டது போலத் தெரிகிறது. அண்மையில் வடமராட்சியில் ஒரு விசித்திரமான சம்பவம் நடந்துள்ளது. தென்னிலங்கையின் நீதிசார் நிறுவனம் ஒன்று உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தியது. சுற்றுப்போட்டி முழுவதும் கொடிகட்டிப் பறந்த ஒரு பிரபலமான அணி அரையிறுதியாட்டத்தில் மண்கவ்வியது. அவ்வணியின் முன்னணி கோல் உதைப்பாளர்களை (**Front line Goal Shooters**) எதிரணியினர் சதிசெய்து வலுவிழக்கச் செய்ததாகப் பரவலாகப் பேசப்படுகிறது. சோடாப்பானத்தினுள் மயக்கப் மருந்து கலந்து அவர்களுக்கு எதிரணியினர் விருந்தளித்தனராம். இதனால் கொடிகட்டிப் பறந்த அணியினர் கோலடிக்கும் வாய்ப்புகளைக் கோட்டைவிட்டனராம். நடந்த சதி உண்மைதானா அல்லது தோல்வியை நியாயப்படுத்துவதற்குத் தோற்ற அணியினர் கூறும் நொண்டிச்சாட்டா என்பது ஒருபுறமிருக்கட்டும். அப்படி உண்மையாக இருந்தால் அந்த வெளிநாட்டுக் கலாசாரம் எம்மவருள்ளேயும் புகுந்துவிட்டதா என ஏராளமான விளை யாட்டு ரசிகர்கள் விசனமடைந்துள்ளனர்.

அதாவது, வீரர்களைச் சதிசெய்து விலைக்கு வாங்கும் அல்லது வீரர்கள் வேண்டுமென்ற சுயலாபங்களுக்காக சதிவலைகளுக்குள் வீழும் அந்த வெளிநாட்டுக் கலாசாரம் எம்முள்ளேயும் ஊடுருவி விட்டதா! இதற்கான சரியான விளக்கத்தை எமது அணியினரை வழிநடத்தும் எங்கள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தினர் அளிப்பார்களா?

**வண்ணார்பண்ணை** **- ஓர் உதைபந்தாட்ட ரசிகன்.**

## கேணியடிப்பகுதி மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுவது ஏன்

கொக்குவில் கேணியடிப் பகுதியில் கடந்த ஒரு மாதகாலமாக தொடர்ச்சியாக இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் 8 மணி முதல் 9.30 மணிவரை துண்டிக்கப்படுகின்றது. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் மின்சாரத் துண்டிப்பாக இருக்கலாம் எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. ஏனெனில், மின் துண்டிக்கப்பட்டவுடன் தொலைபேசி ஊடாக மின்சாரசபைக்குப் புகார் செய்யப்பட்டதும தாமதமின்றி மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் இடம்பெற்றுள்ளன.

தினமும் இரவு 8 மணியாகும் போது மண்ணெண்ணெய் விளக்கைக் கொளுத்தி வைக்க வேண்டிய நிலைக்கு இப்பகுதி மக்கள் தள்ளப்படுகின்றனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நெருங்கும் காலத்தில் இப்படியான மின் துண்டிப்புகள் இடம்பெறுவதால் மாணவர்கள் படிக்க முடியாது பாதிப்புக்குள்ளாகின்றனர்.

மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்தமையினால் ஏற்பட்டுள்ள இந்த மின்விநியோகச் சீர்கேடு ஒருசிலநாள்களில் சீரடைந்து விடும் என்று சுன்னாகம் மின்சார சபைப் பொறுப்பதிகாரி தெரிவித்ததான செய்தி 'உதயன்' பத்திரிகையின் 19-09-2005ஆம் திகதிய 2ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்தது. ஆனால், இப்பிரச்சினை தொடர்ந்து ஒரு மாதகாலமாக நீடிப்பதன் மர்மம்தான் என்ன? மின்பிறப்பாக்கி இன்னும் திருத்தப்படவில்லையா? அல்லது மின்பிறப்பாக்கிக்கான உபகரணங்கள் வரவில்லையா? மின்பிறப்பாக்கி திருத்துவதற்கான பணம் ஒதுக்கப்படவில்லையா? இவ்வாறு எமக்குள்ளே எழும் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் சம்பந்தப்பட்ட துறையின் பொறுப்பான அதிகாரி பத்திரிகை மூலமாவது விளக்கமளிப்பாரா? இவ்விதம் மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுவதால் திருடர்களுக்குத் தமது நோக்கங்களை இலேசாக நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்புக்கிட்டுகிறது என்பதுதான் உண்மை.

**கேணியடி, கொக்குவில்** **ச.சாந்தசுதன்**

## வீதியோரம் கழிவுநீர் நாற்றம்

வண்ணார்பண்ணை சிவன் கோயிலின் தென்புற வலது பக்கத்தில் அமைந்துள்ள சிறு வாய்க்காலில் நீண்ட காலமாக கழிவுநீர் ஓடுவதில்லை.

சுகாதாரப் பரிசோதகர்களிடம் பலமுறை நேரில் சொல்லியும் எவ்வித பிரயோசனமுமில்லை. மழைக்காலத்தின் முன் சீர்செய்து விடுவோமென சொல்கிறார்கள். யாழ்ப்பாணப் பட்டினத்தை அண்மித்த பிரதான வீதி, பிரசித்தி பெற்ற வழிபாட்டுத்தலம், சைவ உணவகங்கள் ஆகியனவற்றின் அருகே இந்த கழிவு வாய்க்கால் உள்ளது. வீதியால் செல்வோருக்குக் கூட துர்நாற்றம். இந்தச் சாக்கடை நாற்றம் சகிக்கமுடியாமல் பொது மக்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்கின்றனர்.

இந்தச் சுகாதாரச் சீரழிவினால் சொல்லொணா வருத்தங்கள் வரும். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் விரைவில் இதைச் சீர்செய்வார்களா? அல்லது மழைக்காலம் வரட்டும் என காத்திருப்பார்களா. மேலிடத் தகவலின்படி வீதித்திருத்தங்கள் நிறுத்தப்பட்டு வடிகால் வேலைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. எது என்னவாயிருப்பினும் முகம் கொடுக்க முடியாமலிருக்கும் சுகாதாரச் சீர்கேட்டிற்கு அதற்கான அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

**வண்ணார்பண்ணை** **மு.மகாலிங்கம்**

## நாம் யார்க்கும் குடியல்லோம்!

ஐரோப்பிய ஒன்றியத்தின் சமீபத்திய அறிவிப்பைத் தொடர்ந்து நான் கவலையும் வேதனையும் சற்றுப் பீதியும் கொண்டிருந்தேன். பின்னர் பொங்குதமிழ் பற்றிய பி.பி.ஸி. செய்தி கேட்டு சற்றே ஆறுதல் கொண்டிருந்தேன். எனக்குப் பத்திரிகை படிக்கச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. நான் வயோதிபன் நோயாளியும் கூட. கல்லெறிதூரமுள்ள வாசிகசாலைக்குப் போகக் கூடத் தெம்பில்லை. எனது பரபரப்பு, இந்த பொங்குதமிழ் நிகழ்வுகள் பற்றிப் பத்திரிகைகளில் பார்த்துத் தெரிந்துகொள்ள உந்தியது. மிகவும் கஷ்டப்பட்டு இன்று காலை வாசிகசாலையடைந்து உதயனைப் படித்தேன். படங்களைப் பார்த்தேன். என் பீதி, கவலை, வேதனை யாவும் அகன்றன.

நான் பல மாதங்களாக ஸ்தானிகராலயங்களுக்கு கடிதங்கள் எழுதி வந்துள்ளேன். எனது விரக்தியைப் பிரதிபலிக்கும் விதமாக எனது பிந்திய ஒரு கடித்தில் ஒரு ஸ்தானிகருக்கு இப்படி ஆரம்பித்தேன் **To err is SriLankan, to veil European...**

நாம் விழிப்புடன் செயல்பட வேண்டிய தருணம் இது. எம்மைச் சுற்றிலும் பகைவர், கபடதாரிகள், கோடாரிக்காம்புகள். இச்சமயம் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றோம். இதோ கூப்பிடு தூரத்தில உள்ள எமது உறவுகள் கூட எமக்காகக் குரல் கொடுக்க முடியாது . தங்கமுலாம் பூசிய விலங்குகளாலும் பணப் பேயாலும் கட்டப்பட்டு உள்ளார்கள். இதற்கு ஒரேயொரு யோசனை தோன்றுகிறது. இந்த யோசனை என்னை நெடுங்காலமாக உறுத்தி வந்துள்ளது. நாம் யார்க்கும் குடியல்லோம் என்ற வாசகம் எமது கடித உறையின் மேல் இடம்பெறச்செய்ய வேண்டும். இது நம் உள்ளத்தில் உறைந்து நிற்க உதவும்.

**கரணவாய்.** **எஸ்.என்.பாலசிங்கம்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



07.10.2005 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில்
இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில்
நெடுந்தீவைச் சேர்ந்த வித்துவான்
**சவரிமுத்து அடைக்கலமுத்து**
அவர்கள்
**கௌரவ கலாநிதிப்பட்டம்**
பெற்றதையிட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவு, நெடுந்தீவு கிழக்கு ச.ச.நிலையம், நெடுந்தீவு வாழ் மக்கள்.

*நெடுந்தீவு.* (சி-45551) (54-13-15)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

ஐந்தாம் ஆண்டு — முதலாம் ஆண்டு





**டானியேல் முருகேசு வேதநாயகம்** — **திருமதி தேவமோகன் கிருபைநேசகுமாரி**

| | | |
|---|---|---|
| 05.08.1921 | அன்னை மடியில் | 02.06.1962 |
| 11.10.2000 | ஆண்டவன் மடியில் | 20.08.2004 |

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது

அன்னம்,
நெல்லியடி வடக்கு, வதிரி,
கரவெட்டி. (41248) (54-13-15)

-குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் ஆறுமுகம் கனகசிங்கம்**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 11.05.1921 | 21.09.2004 |

அன்பாக பண்பாக வாழ்ந்தீர் - என்றும்
அனைவரது உள்ளம் கவர்ந்தீர்
காலமெல்லாம் கண்ணாக காத்தீர் - இன்று
கண்ணீரில் எமைத்தவிக்க விட்டீரே.

*எழுவாவோடை,*
*8ஆம் கட்டை,*
*மல்லாகம்* (சி-45559) (54-13-15)

என்றும் நினைவகலா
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி மீனலோஜினி
உதயகுமாரனின் அன்புத்தந்தை
**திரு. அ. சண்முகநாதன்**
*அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடுபத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கிறோம்.*

ஆசிரியர் கழகம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(சி-45556) (54-13-15)

# கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் கல்விசாரா ஊழியர்
திரு. ச. புவனேஸ்வரனின் அன்புத்தாயார்
**திருமதி பரமேஸ்வரி சற்குணலிங்கம்**
*அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடுபத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.*

ஆசிரியர் கழகம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(சி-45557) (54-13-15)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 2ஆம் வருட மாணவி



**செல்வி தனுஷா மாதவராஜா**

அவர்கள் 07.10.2005 அன்று காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைவதோடு, அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாப ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம் (41247) (54-13-15)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் சக ஊழியர் திரு.ச.புவனேஸ்வரனின் அன்புத் தாயார்
**திருமதி பரமேஸ்வரி சற்குணலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின்
குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

சக ஊழியர்கள், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.
(சி-45555) (54-13-15)

# மரண அறிவித்தல்

அமரர்
**சிவறஞ்ஜினி ஆனந்தரட்ணம்**
(நில அளவையாளர்)



வட்டு. தெற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவறஞ்ஜினி ஆனந்தரட்ணம் நேற்று 10.10.2005 காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற ஆனந்தரட்ணம் (ஓய்வு பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்) காலஞ் சென்ற நகுலாம்பிகை (ஓய்வு பெற்ற இராம நாதன் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகளும் நிர்மலாதேவி (யாழ்ப் பாணக் கல்லூரி ஆசிரியை), சுசிலா தேவி, காலஞ்சென்ற நிறஞ்சனாதேவி ஆகி யோரின் அன்புச் சகோதரியும் தயாளா, சிவ ரூபன் ஆகியோரின் மைத்துனியும் சிவராம், உமாராம் ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2005) செவ்வாய்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கையாற்று இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு. தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (41262) (54-13-15)

தகவல்:-
சகோதரிகள்.


## சக்சஸ் மல்ரி ஹவுஸ்

(S. M.H)

3ஆவது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு
இல :- 68
பெயர் :- ம. நிதர்சனா
முகவரி:- குடத்தனை மேற்கு, குடத்தனை.

*புத்தூர்சந்தி, மீசாலை.* (சி-45558) S. M. H உரிமையாளர்.

## தேவை

திருநெல்வேலியில் ஆரம்பிக்க இருக்கும் நவீன உணவகம் ஒன்றிற்கு முகாமையாளர், உதவியாளர்கள் தேவை தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்புக்கு:- 021 222 2478 (41238)

## உடன் தேவை

நிறுவனம் ஒன்றுக்கு மும்மொழிகளிலும் ஆற்றலுடைய ஆண் ஒருவர் தேவை.
(வயது வரம்பு இல்லை)
தொடர்புக்கு:- 0777 677079 (சி-45552)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

*இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு*
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (ரீல்ஸ்) இன்று மட்டும் 7-9.30
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30,

## நாதன்ஸ் சினிமா

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30,

## ராஜா யாழ்ப்பாணம்

*இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு*
*சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த*
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30,
*(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)*

## மனோகரா யாழ்ப்பாணம்

இன்றுமுதல் இளையதளபதி விஜய், ஜோதிகா, விவேக் நடித்த
**திருமலை**
இன்று முதல் பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க...**
காட்சிநேரம்:- 10.30, 2.30 6.30, 9.30, (பு.நே.) (சி-44110)


# மரண அறிவித்தல்கள்

## அமரர் செல்லத்துரை செல்வரத்தினம்

சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வரத்தினம் (பெரியாம்பி) கனடாவில் 07.10.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சரஸ்வதி தம்பதிகளின் அருமை மகனும் அல்லாரை சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் நிசாந்தனின் பாசமிகு தந்தையும் செல்வராணி (இந்தியா), செல்வானந்தன் (கனடா), செல்வமலர் (கனடா) காலஞ்சென்ற செல்வபூபதி மற்றும் செல்வேந்திரன் (ஜேர்மனி), ஆகியோரின் சகோதரனும் சிவஞானம் (சுவிஸ்), அமுதினி (கனடா), சந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்13.10.2005 வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சம்பச்சிமாவடி*
*சாவகச்சேரி.* (41242) (54-13-15)

தகவல்
திருமதி செ. சரஸ்வதி
தாய்.

## பரமு இராசையா (கந்தையா)

தாவடியைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட பரமு இராசையா (கந்தையா) அவர்கள் நேற்று (10.10.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் தர்மராஜா, புஸ்பவதி, லீலாவதி, சண்முகதாஸ், அருமைராஜா, கமலாவதி, சிவதாஸ், விஜயராஜா, யோகராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு, ஆனைக்கோட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*பிள்ளையார் கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.* (41254) (54-13-15)

தகவல்:
க.தர்மராஜா
(மகன்).

## சோமசர்மா (C.G.R) இராஜேஸ்வரி அம்மா

(ஆயாக்கடவை - புன்னாலைக்கட்டுவன்)

சோமசர்மா - இராஜேஸ்வரி அம்மா (இராசம் அம்மா) அவர்கள் (09.10.2005)ஞாயிறு அன்று இந்தியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தக்குருக்கள் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசர்மாவின் (ஆயாக் கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம் புன்னாலைக்கட்டுவன்) அன்பு மனைவியும் சிவசங்கர், ஜெயவர்த்தனி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*ஆயாக்கடவை சித்திவிநாயகர்*
*தேவஸ்தானம்,*
*புன்னாலைக்கட்டுவன்.*
*T.P.: 077 6167339* (41253) (54-13-15)

தகவல்:
பா.சுந்தரராஜ சர்மா

## சின்னத்தம்பி கதிரவேலு



உடுப்பிட்டி நாவலடியைப் பிறப்பிடமாகவும் ஆதியாமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கதிரவேலு 07.10.2005 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னவள், சின்னப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற ஆனந்தி, மற்றும் பவளம், சுந்தரம், சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவனும் காலஞ்சென்றவர்களான சீனியர், அன்னம் மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறிபாஸ்கரன் (கொலண்ட்), சாந்தி (லண்டன்), சாந்தன் (சுவிஸ்), சுதா (சுவிஸ்), அருந்தவராசா (கடவுள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மிராந்தா (கொலண்ட்), வரன் (லண்டன்), நந்தினி (சுவிஸ்), வாணி (சுவிஸ்), ஜெயா ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவின், ரஸ்வின் (கொலண்ட்), டயா, வவி, சுஜி (லண்டன்), சந்தியா, சந்தியன் (சுவிஸ்), துஷன், மதுஷன் (சுவிஸ்), நிந்துஷா, நிதுஷன், கஜானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2005) பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆதியாம லை,*
*உடுப்பிட்டி.* (41249) (54-13-15)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி சின்னத்தங்கம் பொன்னுத்துரை



தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தங்கம் பொன்னுத்துரை நேற்று (10.10.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் பொன்னுத்துரையின் (Brown) அன்பு மனைவியும், அமரர்களான சேதுப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*601/2, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (41244) (54-13-15)

தகவல்:
கி. யோகராசா
(மருமகன்).

# இன்றைய நிகழ்வுகள்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை கனகரத்தினம் மண்டபத்தில் இடம்பெறுகிறது. கலாபூஷணம் இலட்சுமண ஆச்சாரி கெங்காதரன் இதில் பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்கிறார்

* * *

குருநகர் சனசமூக நிலைய பாலர்பாட சாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலை யத் தலைவர் அ.யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார் பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-51)

* * *

பண்ணாகம் அம்பாள் கலைமன்றம் நடத்தும் வாணிவிழா இன்று மாலை 4 மணிக்கு து.துரைராஜ் தலைமையில் பண்ணாகம் நெல் லியான்காளி கோயில் முன்றிலில் நடை பெறும்.

## இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.11

வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலை யில் யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத்தெரு வைச் சேர்ந்த முஹமட் பைஸால் (வயது 31) என்பவர் நேற்றிரவு யாழ். போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

யாழ். ஐந்துசந்திப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றிலேயே இவர் படு காயமடைந்தார் என்று கூறப்படுகின்றது. (ஒ-12-13)

இதில் ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்ளவுள்ளார். இதில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-51-135)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

அரியாலை கலைவாணி சனசமூக நிலைய வாணிவிழா இன்று பிற்பகல் 4.30 மணியள வில் நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சொற்பொழிவு, குழுநட னம், வில்லிசைப்பாடல்கள், நகைச்சுவை நாடகம் போன்ற கலைநிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (ஒ-49-51-ரி)

* * *

கொழும்புத்துறை,ஒக்.11

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாணிவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்கத்தலைவர் சூ.சிறில் தலைமை யில் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். (ஒ-30)

* * *

கோண்டாவில் கிழக்கு வல்லீபுரநாதன் ஆலய வருடாந்த தேர் உற்சவம் இன்று காலை 10 மணிக்கும் நாளை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.(ஒ-49)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

சிவஸ்ரீ சின்னத்தம்பி சுவாமிகளின் மகா சமாதிக் குருபூசை தினவிழா இன்று காலை 10 மணியளவில் மறவன்புலோவில் அமைந் துள்ள அவரது சமாதியில் நடைபெறவுள் ளது. (ஒ-13)

## மஹிந்த ராஜபக்ஷ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்ட உடன்படிக்கைகள் ஜனாதி பதியைப்போல அனுராவையும சீற்றத்தில் ஆழ்த்தியிருக்கின்றன.

தமது உத்தியோகபூர்வ இல்லமான விசும் பாயவில் நேற்றுக்காலை, கொழும்பிலுள்ள ஜப்பான் தூதுவர் அக்கியோ சுடா, சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி ஆகியோரை தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தினார் அமைச்சர் அனுரா பண் டாரநாயக்க.

இந்தப் பேச்சுகளுக்குப் பின்னர் செய்தி யாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச் சர் அனுரா பண்டாரநாயக்க, பிரதமர் மற் றும் அவருக்கு ஆதரவளிக்கும் கூட்டணி களைக் கடுமையாக விமர்சித்தார்.

அவர் அங்கு கூறியதாவது:-

அமைதி முயற்சிகளின் நிலைமை மற் றும் அதை முன்னெடுப்பதற்கு அரசுக்குள்ள ஆர்வம் என்பன பற்றியும், போர்நிறுத்த ஒப் பந்தத்தின் மீறல்கள் பற்றியும் என்னைச் சந் தித்தவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

அமைதி முயற்சிகளைப் பொறுத்தவரை அது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின் னரே ஆரம்பமாகும் நிலைமை உள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி. மற் றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளார் எனக் கூறப் படுகின்றது. ஆனாலும் அவர்களின் கொள்கை என்ன என்பது பற்றித்தான் சரியாகத் தெரிய வில்லை. நாங்கள் முன்னர் ஆட்சியமைப் பதற்காக ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தபோது சில விடயங்களைத் தெளிவாகக் கூறியிருந் தோம். ஆனால் இப்போது நிலைமை என்ன? சீனா, ரஷ்யா போன்ற கம்யூனிஸ்ட் நாடு களை பார்த்துக்கூட ஜே.வி.பி. இன்னும் திருந்தவே இல்லை என்றே கூறவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு தான் தீர்வென்பது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு.பொதுக்கட்டமைப்பை முழுமை யாக ரத்துச் செய்வது எங்ஙனம் நியாயம்? ஆழிப்பேரலையினால் கூடுதலாகப் பாதிக் கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு மக்கள் தான். நிதி மற்றும் பொருள்கள் அவர்களுக்கும் சரி சமமாகக் கிடைக்கவேண்டும். அது அவர் களுக்குள்ள உரிமை. புலிகளுடன் பேசுவதை ஜே.வி.பி. கூட்டணி நிராகரிக்கிறது. அப்படி யானால் யுத்தம் தான் தீர்வா? ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் கொள்கை இதுவல்ல. எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத் தின்போது ஜனாதிபதி கலந்துகொள்ளும் கூட்டங்களில் மட்டும் நான் கலந்துகொள்வேன்.

- இவ்வாறு அமைச்சர் அனுராபண்டார நாயக்க கூறினார். (க)

## கதிர்காமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெஹிவளை பொலீஸாரினூடாகக் குற்றப்புலனாய்வுப் பணியகத்திடம் ஒப் படைக்கப்பட்டார்.

முன்னதாக இவரிடமிருந்து இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளின் கடவுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டிருந்தன. முன்னாள் அமைச்சர் கதிர்காமருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார் எனக் கூறப் படும் ஞானக்கோன், விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் தொடர்பில் அமைச்சருக்குத் தவறான தகவல்களை வழங்கினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் கதிர்காமரின் கொலை தொடர் பில் இவரிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் கொல்லப்படுவோர் பட்டியலில் இருந்து கதிர்காமரின் பெயர் நீக் கப்பட்டுவிட்டது என்ற ரீதியில் கதிர்காமருக்கு ஞானக்கோன் உறுதி வழங்கியிருந்தார் என்று விசாரணை அதிகாரிகள், ஊடகங்களுக்கு ஏற்கனவே தகவல்களைக் கசிய விட்டிருந்த னர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது உறுதி மொழியை அடுத்தே கதிர் காமர் தனது பாதுகாப்புத் தொடர்பில் அக் கறையின்றி இருந் தார் என்றும் அதிகாரி கள் கூறுகின்றனர். (க)

## சிப்பாயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தின் பின்னரே காயமடைந் தவர் இராணுவ அதி காரி என அடையா ளங்காணப்பட்டுள் ளார். அவர் திருகோண மலை இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். துப்பாக்கிப் பிர யோகத்தை மேற் கொண்டவர் எனக் கூறப்படும் இராணு வச்சிப்பாய் உப்பு வெளி பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார். (க)

IIS

புலமைப்பரிசில் திட்டம் 2006

மாணவர்களே! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த எமது அடுத்த கல்வியாண்டிற்குரிய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று (12.10.2005) புதன்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்றைய தினம் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பதிவுக்கட்டணத்தில் விசேட சலுகை வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 12.10.2005 உதயன் பத்திரிகையை எதிர்பாருங்கள்.

இயக்குநர்
IIS. யாழ்ப்பாணம்

## புலிகள் தொடர்பாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர்கள், மாநகரசபை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அந்த நிகழ்வின் பின்னர் 'உதயனு'க்கு வழங்கிய பிரத்தி யேக செவ்வியில் நெதர் லாந்துத் தூதுவர் தெரிவித்ததாவது:-

நெதர்லாந்து அரசினால் இங்கு மேற் கொள்ளப்படும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக இங்கு வந்துள்ளேன். இங்குள்ள பிரச்சினைகளை நேரடியாக அறிந்து கொள்வதன்மூலம் மேலும் உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளமுடியும்.

நெதர்லாந்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு. இதற்கு முன் னர் அது ஒரு தடவை ஐரோப்பிய ஒன்றி யத்தின் தலைமைப் பதவியை வகித்துள் ளது. அடுத்த தடவையும் அது தலைமைப் பதவிக்குப் போட்டியிடவுள்ளது.

அண்மையில் விடுதலைப் புலிகள் தொடர் பாக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த தீர்மா னத்தை சில ஊடகங்கள் திரிபுபடுத்தி விட் டன. அந்தத் தீர்மானத்தில் விடுதலைப் புலி களின் அரசியல் தூதுக் குழுக்கள் ஐரோப் பிய நாடுகளுக்கு விஜயம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதென்று எந்த இடத் திலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. புலி களின் அரசியல் குழுக்களை உத்தியோக பூர்வமாக வரவேற்பதில்லை என்றே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்து அவர்களுக்கான பயணத்தடை என்று அர்த் தப்படாது.

இந்த அறிக்கையின் மூலம் புலிகளுடன் பேசக் கூடாது என்றும் ஐரோப்பிய ஒன்றி யம் தடைசெய்யவில்லை. அப்படியான உத்தி யோகபூர்வ அறிவிப்பு எதனையும் அது வெளியிடவில்லை. தேவையேற்படும் வேளைகளில் புலிகளுடன் பேசுவதற்கும் நாம் பின் நிற்கமாட்டோம். எந்த வேளை யிலும், இப்போது தேவை ஏற்பட்டாலும் கூட நாம் பேசுவதற்குத் தயாராக உள்ளோம்.

சில சாதகமான முடிவுகளை புலிகள் எடுக்க வேண்டும் என்பதற்காகவே ஐரோப் பிய ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை எடுத் திருக்கின்றது. எனவே, அதற்குரிய முடிவு களைப் புலிகள் எடுப்பார்கள் என நாம் நம்பு கின்றோம். அரசு - புலிகளிடையே நடைபெற்று வரும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு நோர்வே அரசு அனுசரணை வழங்குவதை ஐரோப் பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

யுத்தநிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக் கப்பட வேண்டும் என்பதையும், சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் இரு தரப் புக்கும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதி பதித் தேர்தல் வன்முறைகளற்ற முறையில் நடைபெறவேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு. எல்லா மக்களும் தமது வாக்குரிமைகளை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார் தூதர். (ஐ-8-7)

## புலமைப் பரிசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பரிசில் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்றது.

இந்தப் பரீட்சை முடிவுகளின் அடிப் படையில் சித்தியடையும் மாணவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் புதிய பாடசாலைகளைத் தெரிவுசெய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெறுபேறுகளை **www.doenets.lk** என்ற இணைய முகவரியில் பார்வையிடலாம். இதே வேளை, **www google.lk** என்ற தேடுதல் இணையத்தளத்தில் **year 5 scholorship results** என்ற தலைப்பில் தேடுதல் செய்தும் பார்வையிடலாம்.

இம்முறை விடைத்தாள்களை மீள்பரி சீலனை செய்யும் கோரிக் கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஒ-3-205)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புருஹொவ்டே நேற்றுக்காலை இலங்கை வந்தடைந்தார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவினருடன் இன்று பேச்சுகளை நடத்த வுள்ள புரு ஹொவ்டே, இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரையும் சந்தித்துக் கலந்துரை யாடவுள்ளார்.

நாளை அரசின் உயர்மட்டத்முக்கியஸ் தர்களைச்சந்திக்கவுள்ள அவர், நாளை மறு தினம் வியாழக்கிழ மை வன்னிக்கு சென்று விடுதலைப்புலிகளு டன் பேச்சுக்களை நடத் தவுள்ளார். (க)

விக்னா கல்வி நிறுவனம்

பிரிவு-2 ஆரம்பம்-12-10-2005
திங்கள்,புதன்,வெள்ளி

தமிழ் - திரு.குழந்தை-பிரிவு-2 (10.30)
பிரிவு-1 (8.30)
இந்துநாகரிகம்-திரு.ஜெயக்குமார் -(9.30-10.30)
அளவையியல்-திரு.ஜெயந்தன்
பிரிவு-1-குறியீட்டு அளவையியல் -(11.30)
பிரிவு-2-எடுப்புகள்-(7.30)
புவியியல்-திரு.பாபு-பிரிவு-1-(11.30)
பிரிவு-2-(8.30)
கிறிஸ்தவம் - திரு.வசந்தன்-(9.30)
நாடகமும் அரங்கியலும்-திரு.ரமேஸ் - (12.30)
இந்துசமயம்- திரு.N.T.தரன்-(10.30)
வரலாறு- திரு.பத்மன் -சனி,ஞாயிறு (11.30)

தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்
(41232)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்ரோபசன் கேட்டு அறிந்து கொண்டார் என்றும் - தெரி விக்கப்பட்டது.

தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப் பாளர் சோ. தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச அரச சார்பற்ற நிறுவனங்க ளின் இணைப்பாளர் மு.தியாகராஜா, தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானப் பணிப் பாளர் புலித்தேவன் ஆகியோரும் இச் சந்திப் பில் கலந்து கொண்டனர். (ஒ)

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு இளைஞர்கள் 9எம்.எம்.ரக கைத் துப்பாக்கி மூலம் அவரைச் சுட்டுக்கொன்று விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென் றனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

## மின் விநியோகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அண்மைக் காலமாக அடிக்கடி மின் தடை ஏற்பட்டுவருகின்றது.

'கூல் ஏயார்' நிறுவனம் கொழும்பில் இருந்து ஐந்து புதிய மின்பிறப்பாக்கிகளை கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துவந்துள் ளது. இவை ஒவ்வொன்றும் 550 கே.டபிள்யூ வலுவுள்ளவை.

இவற்றைப் பொருத்தும் பணி தற்சமயம் நடைபெற்றுவருகின்றது. இந்தப் பணி பூர்த்தி யாகி ஓரிரு தினங்களில் மின்சாரம் பெற முடியும் இவ்வாறு அந்த அதிகாரி மேலும் கூறினார். (3)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை தவகுலரட்ணம்

சுழிபுரம் வழக்கம்பரையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட கனகசபை தவகுலரட்ணம் அவர்கள் நேற்று (10.10.2005) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வழக்கம்பரை, சுழிபுரம்.* (41259) (15-13-33)

தகவல்: அகிலன் (மகன்)

### செல்லையா சுந்தரம்பிள்ளை

(முன்னாள் **Singer Company Agent**)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு சுன்னா கத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரான செல்லையா சுந்தரம் பிள்ளை அவர்கள் நேற்று (10.10.2005) திங்கட்கிழமை சிவபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு புத்திரனும் காலஞ்சென்ற சிரஞ்சீவி (இளைப்பாறிய **Central Bank Director**), காலஞ்சென்ற இரத்தினம் - இரத்தினாம் பாள், ஜெயலக்ஷ்மி - சண்முகலிங்கம் (இளைப்பாறிய உதவி முகாமையாளர், **Bank of Ceylon**), காலஞ்சென்ற முத்துத்தம்பி - பரலோகேஸ்வரி ஆகியோரின்அன்புச் சகோதரனும் கோபிக் கண்ணா, கிசோவர்மா (**A/L 2005, Jaffna Hindu College**) ஆகியோ ரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.10.2005) திங்கட் கிழமை பி.ப. 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக் காக எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (41261) (15-13-33)

தகவல்: P.கிசோவர்மா (பேரன்) (A/L 2005 Jaffna Hindu College)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.